Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...

- ஆங்கிலக் கல்வியின் அவசியம் - பக். 05
- கபாலி பாடல் வரிகள் - பக். 16
- பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும் - பக். 07



விலை : ரூபா 20.00


செய்தி - 44 ஜூலை 30-ஒகஸ்ட் 05, 2016 பக்கம் - 20

## பிரபா, பொட்டம்மான், சூசை இறந்து விட்டனர்

### அவர்கள் இனி வரமாட்டார்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வருவார். பொட்டம்மான் வருவார். சூசை வருவார் என காத்திருக்க முடியாது. அவர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள்.



02 இல்

# நீங்களும் நானும் ரூபா 309 333 மில்லியன் கடனாளிகள்





(கொழும்பு)

2015 ஆம் ஆண்டு இறுதியில் வெளியான மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் இந்த நாட்டின் மொத்தக் கடன் அமெரிக்க டொலர் 44.8 பில்லியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நாட்டில் வாழும் அனைவரும் ரூபா 3 இலட்சத்து 9 ஆயிரத்து 333 மில்லியன் நாட்டின் கடனுக்கு செலுத்த வேண்டி உள்ளது. இது வருங் காலத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்கும் இந்தக் கடனில் பங்கு உள்ளது.

02 இல்

## காணாமல்போன 16 ஆயிரம் பேர் எங்கே?



(கொழும்பு)

காணாமல் போன 16 ஆயிரம் பேர்களின் விபரங் களை தரவும் என்று இலங்கை அரசாங்கத்தை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வற்புறுத்தி யுள்ளது.

02 இல்






எல்லாள மன்னன் போர் விதிகளுக்கு மாறாக கொல்லப்பட்டு சாகடிக்கப்பட்டான். இந்த உண்மையை சிங்கள வரலாற்றாளர்கள் வேண்டும் என்றே மறைத்து துட்டகாமினியை பெரும் வீரனாகக் காட்டி வருகிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானது. எல்லாள மன்னன் துட்டகாமினியின் கபடத் தனத்தாலும் யுத்த வரைபு களுக்கு மாறான அவரது நடவடிக்கையாலும்தான் தோற்கடிக்கப் பட்டு, கொல்லப்பட்டார்...

02 இல்

# துட்டகாமினி நயவஞ்சகமாக எல்லாளனை போரில் வென்றான்

உண்மைகளை உரத்துக் கூறும் உரிமைக் குரல் - என்றும் உங்களுடன்

# தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

## தமிழினி - ஒரு கூர்வாளின் நிழலில்

தமிழினி தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பிரிவின் தலைவராக இருந்தவர். சுப்பிரமணியம் சிவகாமி என்ற இயற் பெயரைக் கொண்டவர். இவர் 29.07.1991 ஆம் ஆண்டு விடுதலைப் புலி இயக்கத்தில் பாடசாலை மாணவியாக இருக்கும் காலத்தில் இணைந்து 17.05.2009 ஆண்டு வரை கிட்டத்தட்ட 18 வருடங்கள் தமிழீழ விடுதலை புலிகளில் இருந்தார். அவர் 18 ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 2015 ஆம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்டு காலமானார்.

இவருக்கு 5 சகோதரிகளும், ஒரு சகோதரனும் இருந்தார்கள். இவரது சகோதரி ஒருவரும் தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தில் சேர்ந்து - புலிகளின் மொழியில் கூறுவதாயின் அவர் வீர மரணமடைந்தார். தகப்பனார் அவருக்கு 12 வயது இருக்கும் போது இறந்துவிட்டார். தாயார் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அண்மையில் தாயார் வாழும் வீட்டிற்கு சென்றிருந்தேன். அவர் மிக்வும் ஏழ்மையிலும் வறுமையின் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்ததை பார்த்து கண்கள் கலங்கியது. யாருமே அந்தத் தாய்க்கு உதவி செய்ய முன்வரவில்லை. நன்றி கெட்ட உலகம் என்று தான் நினைத்தேன்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 க்குப் பின்னர் இலங்கை இராணுவத்தில் சரணடைந்து யூன் 2013 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் பூந்தோட்ட முகாமில் புனர்வாழ்வு பெற்று 2013 ஆம் ஆண்டு வெளியில் வந்தார்.

தமிழினி எழுதியதாகச் சொல்லப்படும் ஒரு கூர்வாளின் நிழலில் 218 பக்கங்களையும் 16 அத்தியாயங்களையும் கொண்டது. இந்தப் புத்தகம் தமிழினி இறந்த பிற்பாடு அவரது கணவரான ஜெயக்குமார் மகாதேவாவினால் சென்ற மார்ச் 17 கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

இந்த நூல் நான் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. சென்ற வாரம் இந்த நூலை கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் வாங்கினேன். இந்த நூலைப் படிக்கும் பொழுது பல உண்மைகள் கூறப்பட்டிருப்பதை படித்து நான் வியந்து போனேன். இவைகள் எல்லாம் 18 வருட காலம் தமிழீழ விடுதலைப் புலியில் இருந்த தமிழினி தான் எழுதினாரா என்ற சந்தேகம் மனதில் நிழலாடத் தொடங்கியது.

'தொடர்ந்து போராடுவேன்", என்ற தலையங்கத்தில் தமிழினி ஜெயகுமாரன் கூறியதாக வெளிவந்த பகுதியில் 'எமது எதிர்கால சந்ததியினர், தம்து அறிவாற்றலினால் மட்டுமே வென்றெடுக்க இடைவிடாது முயலவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், போரில் உயிர் இழந்த ஒருவரும் இந்த யுத்தம் எங்களோடு முடிய வேண்டும். அது அடுத்த சந்ததிக்கு தொடரக் கூடாது என்று தான் நினைப்பார்கள்.

இது தமிழினி ஜெயகுமாரினால் 30.8.2015 எழுதப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 43 வயதான தமிழினி இறந்த பிற்பாடு வெளியிடப்பட்ட நூலில் இவ்வாறு திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு குழப்பத்தையே எனக்குத் தருகிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் 'கட்டாய ஆளெடுப்பு முறையை தனது புத்தகத்தில் வன்மையாகக் கண்டித்துள்ளார். தலைவர் தவறான முடிவுகளில் முக்கியமானது கட்டாய ஆட்சேர்ப்பு என்பது எனது நிலைப்பாடு." (பக்கம் 181)

இன்னும் ஓர் இடத்தில், 'அதாவது இயக்கத்தின் தலைவரும் அவருடன் சில போராளிகளும் இரகசியமாக வெளியேறுவதற்கான திட்டமிருப்பதாகவும், ஆனால் அவர்கள் பெருங்கடல் மூலமாக வெளியேற முடியாதபடி முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் சண்டை படகுகள் இறுக்கமாக முற்றுகையிட்டிருப்பதால் நந்திக் கடல் நீரேரியை சிறிய படகுகள் மூலமாக கடந்து சென்று கேப்பாபிலவு பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்துடன் சண்டையிட்டு ஒரு பாதையை ஏற்படுத்திக் கொண்டு, கேப்பாபிலவு காட்டுப் பகுதிக்குள் நுழைந்து அதனூடாக முன்னேறிப் பெருங்காட்டுக்குள் நுழைந்து விடுவது என தீர்மானித்திருப்பதாக அறிய முடிந்தது." - (பக்கம் 212)

மேலும், 'எனக்கு இந்த தகவல் எவ்வளவு நம்பகரமானது என தெரியவில்லை. இருப்பினும் போராளிகள் கைவிடப்பட்டு விட்டார்கள் என்பது அக்கணத்தில் தெரிந்தது. ................ எமது போராட்ட வாழ்க்கையின் முடிவை இயக்க தலைமை என்றோ தீர்மானித்து விட்டதாக அக்கணத்தில் எண்ண தோன்றியது." - 213, 213 ஆம் பக்கம்

16 ஆம் திகதி மாலை ... "அலை போல் மக்கள் வெளியேறத் தொடங்கினார்கள். தமிழீழ விடுதலை புலிகளின் ஆயுதப் போராட்டம் படுபயங்கரமான முறையில் தோல்வியடைந்து விட்டதென்ற உண்மையை அக்கணத்தில் உணர்ந்துகொண்டேன்." (பக்கம் 215, 216)

இதுவே, எம் மத்தியில் இன்றில்லாத தமிழினியின் கூற்றுக்கள்.

ஒரு கூர்வாளின் நிழலில் என்ற புத்தகத்தில் அவரது கணவரான மகாதேவன் ஜெயக்குமார் வெளியிட்டதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நீங்களும்...

2000 ஆம் ஆண்டு நாட்டின் மொத்தக் கடன் தொகை டொலர் 9 பில்லியன், 2009 ஆம் ஆண்டில் டொலர் 18 பில்லியன், 2010 ஆம் ஆண்டு டொலர் 21.2 பில்லியன் இறுதியாக 2015 இல் நாட்டின்கடன் பளு இரட்டிப்படைந்து 140 வீதம் அதிகரித்து 44.8 பில்லியனாக மாறியது.

இந்தக் கடன் சுமைக்கு பொறுப்பாளர்கள் இந்த நாட்டு மக்கள் எல்லோரின் தலையிலும் விழுந்துள்ளது என்றால் மிகையாகாது. இதை யாரும் கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் இது தான் உண்மை.

எங்கள் ஏற்றுமதி குறைவடைந்துள்ளது. அதனால் கடன் பழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது. இன்று கடனுக்காக வருடாந்தம் வழங்க வேண்டிய தொகை, 2011 இல் டொலர் 1.8 பில்லியனாக இருந்தது. ஆனால் இன்று 2015 இல் முதலுக்கான கொடுப்பனவு டொலர் 3.46 மில்லியன் கடனுக்கான வட்டி வருடத்திற்கு 1.16 மில்லியன் மொத்தமாக பெற்ற மொத்த கடன் வருமானம் 4.68 மில்லியன் செலுத்த வேண்டும்.

நாட்டின் ஏற்றுமதி 2011 இல் டொலர் 136 பில்லியனாகும். 2015 இல் 24 வீதம் மாத்திரம் அதிகரித்து ஏற்றுமதி வருமானம் டொலர் 16.9 பில்லியனாக உள்ளது.

அரசாங்கம் தொடர்ந்து கடன் பெறுகிறதே தவிர வருமானத்தைக் கூட்ட எந்த முயற்சியும் இதுவரை எடுக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பின்னர் ஆட்சிபீடம் ஏறிய மைத்திரி - ரணில் அரசு அமெரிக்க டொலர் 6361 மில்லியன் (6361 / 1000 = பில்லியன்) கடனாகப் பெற்றுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட கடன் இதுவரை எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. எமது நாட்டை முன்னேற்ற அபிவிருத்தித் திட்டங்கள் செய்ய வேண்டும்.

மஹிந்த அரசும் மைத்திரி-ரணில் அரசும் இதுவரை அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களை அமுல்படுத்தியதாக தெரியவில்லை.

இன்றைய நிலையில் எமது தலையில் 44.8 பில்லியன் டொலர் கடன் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டில் வாழும் 20,829,847 மக்களும் இனிமேல் பிறக்கக் கூடிய சந்ததியும் கடனாளியாக உள்ளனர்.

எனவே 44.8 பில்லியன் 1000 * 44800 (ஒரு டொலர் 145.99 ரூபா) மில்லியன் ஆகும். இதை ரூபா 145 என்று கணக்கிட் டால் 44800*145 = 6496000 மில்லியன் ஆகும். சனத்தொகை 21மில்லியன் என்று கணக்கு வைத்து பிரித்தால் ஒருவர் கொடுக்க வேண்டிய கடன் 309333 மில்லியன் ஆகும்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பிரபா..

30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எங்கள் அரசியல் வெற்றி எங்கள் ஒவ்வொருவரின் கையில்தான் உள்ளது. எங்கள் அரசியல் விடிவினை நாங்களே பெற்றுக்கொள்ள வேண்டும் இவ்வாறு துளசி என அழைக்கப்படும் கா. சந்திரலிங்கம் கூறினார்.

இவர் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளராவார். 2009 ஆம் ஆண்டு மே மாதம் சுமார் 12,500 முன்னாள் விடுதலைப் புலிகள் சரணடைந்தனர். ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக ரீதியில் இயங்கும் முன்னாள் போராளிகள் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர். இந்த அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பில் முன்பு முக்கிய பதவி கள் வகித்தார்கள்.

ஊடகப்பேச்சாளர் துளசி தமிழீழ நிர்வாக சேவையில் அபிவிருத்திக்குப் பொறுப்பாளராக இருந்தவர். தலைவர் வேந்தன் பாதுகாப்பு அணியிலும் செயலாளர் கதிர் ராதா பாதுகாப்பு அணியிலும் சேவையாற்றியவர்.

துளசி எனப்படும் கா. சந்திரலிங்கத்துடன் தினச்செய்தி தொடர்பு கொண்ட போது,

2001 ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் போரியல் ரீதி யில் இராணுவ பலம் பெற்ற காலத்தில் தமிழ்ப் பிரதேசம் எங்கும் ஓர் அரசியல் தீர்வு காணும் வகையில் சமாதான காலம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் காலத்தில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பாரிய குற்றச்சாட்டு

(தொடர்ச்சி...03 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## துட்டகாமினி...

இந்த யுத்தம் சம்பந்தமாக என்ன நடந்தது என்று இப்போதாவது எழுதாவிட்டால் நாங்கள் எங்களுடைய கடமையில் இருந்து தவறியவர்கள் ஆவோம்.

'மகாவம்சம" என்ற நூல் தீப வம்சத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. மஹாநாம என்ற பௌத்த துறவியினால் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது வரலாற்று நூல் வழிமுறைகளை பின்பற்றி எழுதப்படவில்லை. ஆனால் 'பக்தி உள்ளத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் மற்றும் உணர்வுகளுக்குமாக" இந்த நூல் எழுதப்பட்டது.

மேலும் சிங்கள மன்னன் தமிழ் மன்னர்களை வெற்றி பெற்றதை பாராட்டும் விதமாக இந்த நூல் எழுதப்பட்டது. சிங்கள மன்னர்கள் பௌத்த மக்களின் பாதுகாவலர்கள் என்று பெருமைப்படுத்த எழுதப்பட்டது. தமிழர்கள் படை எடுத்து கொள்ளையடித்து சூறையாடுபவர்கள், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்,சேதாரங்களை ஏற்படுத்துபவர்கள் என்று எல்லாம் கீழ்த்தரமாக வர்ணித்தார்கள்.

(தொடர்ச்சி ...18 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## காணாமல் ...

ஜெனிவாவைத் தலைநகரமாகக் கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த 14 மாத காலமாக இலங்கையில் நடாத்திய கணக்கெடுப்பின் போது ஆயிரக்கணக்கான தமி ழின மக்கள் இப்பவும் தமது சொந்தங்களைத் தேடுகின்றார்கள் என்று அறிவித்துள்ளார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், 34 பக்க அறிக்கையை "நிச்சய மற்ற வாழ்க்கை" என்ற தலைப்பில் வெளியிட:டுள்ளது. அந்த அறிக்கை காணாமல் போனோர்களின் விபரங்களையும், அவர்கள் எங்கே உள்ளார்கள் என்பதனையும் வெளியிடுமாறு இலங்கை அரசாங் கத்தை நிர்ப்பந்திக்கிறது.

இந்த செஞ்சிலுவை சங்கத்தின் கணக்கெடுப்பின்போது செஞ்சிலுவைச் சங்கம் மொத்தமாக 395 குடும்பங்களைச் சந்தித்து நடத்திய விசாரணை யின் போது தொடர்பு கொண் டவர்களில் மூன்றில் ஒரு பகுதி யினர் தங்கள் அன்புக்கும் நேசத் திற்கும் பாத்திரமானவர்கள் இறந்து விட்டார்கள் என்றும், மூன்றில் ஒரு பகுதியினர் அவர்கள் எங்கோ உயிருடன் இருக்கிறார்கள் என்றும், மிகுதியானவர்கள் தங்கள் சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்கள்.

இந்தக் கணக்கெடுப்பின்போது குடும்பங்கள் முக்கியமாக தங்கள் சொந்தங்களின் நிலை என்ன? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்று அறிய விரும்புவதாகவும் அதே நேரம் இவர்களும் சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெரும் இன்னல்களுக்கும் ஆளாக்கப் படுவதாகத் தெரிய வருகிறது.

தமிழ்ப் போராளிகள் தமக்குத் தனி நாடு வேண்டும் என்று போராடிய போது இலங்கை அரசாங்கம் 2009 ஆம் ஆண்டு மிருகத்தனமான தாக்குதலை நடாத்தி அந்தப் போராட்டத்தை முறியடித்தது.


இறுதியாக நடைபெற்ற போராட் டத்தில் கிட்டத்தட்ட 40 000 பேர் கொல்லப்பட்டார்கள் என்று கருதப்படுகிறது.

சுமார் 37 வருட காலமாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பெருந்தொகையானோர் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போய் விட்டார்கள்.

1987 ஆம் ஆண்டுக்கும் - 1990 ஆம் ஆண்டுக்கும் இடையில் பாதுகாப்புப் படையினர் மற்றும் அரசாங்க ஒட்டுண்ணிக் குழுக்கள் நடாத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போய் விட்டார்கள்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் 1989 ஆம் ஆண்டு இலங்கையில் அடி வைத்த பின்னர் 16000 பேர் காணாமல் போய் உள்ளார்கள் என்று தெரிவித்துள்ளது. இந்த தரவில் பாதுகாப்புப் படையில் காணாமல் போனவர்கள் என்று கருதப்படும் 5100 பேரும் அடங்குவர்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2016



(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி 2016 இல் அமெரிக்காவின் 58 ஆவது ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு உத்தியோகபூர்வமாக குடியரசுக் கட்சியின் வேட்பாளராக சென்ற 18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரையும் ஒகியோ மாகாணத்தின் கிளீவ்லேண்டில் நடைபெற்ற குடியரசு கட்சி மாநாட்டில் டொனால்ட் டிரம்ப் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பில்லாடெல்பியாவில் சென்ற யூன் 25 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டில் அக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளராக ஹிலாரி கிளிண்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹிலாரி கிளிண்டனே அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முதல் பெண் வேட்பாளராவார்.

இவர் முன்னால் இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்த பில் கிளிண்டனின் மனைவியாவார்.

உத்தியோகபூர்வமாக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதை அடுத்து விரைவில் இந்த இரு வேட்பாளருக்கும் இடையில் அரசியல் விவாதங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சிங்கள மாணவர்கள் வருகை தரவில்லை

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம் தொடர்ந்தும் மூடப்பட்டே இருக்கிறது. சென்ற யூலை 16 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடந்த கலவரத்தை அடுத்து, சில நாட்கள் மூடப்பட்டிருந்த பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திறக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பிரச்சினைக்குரிய விஞ்ஞான பீடம் தொடர்ந்து மூடப்பட்டே இருக்கிறது.

இந்த விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலுவோரில் ஜம்பது வீதமான பட்டதாரி மாணவர்கள் சிங்களவர் ஆவார். அவர்கள் சென்ற யூலை 16 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வன்செயல்களை அடுத்து தங்கள் தங்கள்




வீடுகளுக்கு சென்றார்கள். அதன் பின் இன்று வரை அவர்கள் தங்கள் கல்வியை தொடர பல்கலைக் களகத்திற்கு வருகை தரவில்லை.

விஞ்ஞான பீடத்தில் புதிய மாணவர்களை வரவேற்க நடந்த வரவேற்பு நிகழ்ச்சியை அடுத்து ஏற் பட்ட குழறுபடிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் முழுமையாகவே மூடப்பட்டது.

இது சம்பந்தமாக உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ஜி. ஜெயசிங்க கருத்து தெரிவிக்கையில், ஒட்டு மொத்தமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் வருகை திருப்திகரமாக உள்ளது என்றும், அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதிய பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளது என்று கூறினார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், பல்கலைக்கழகத்தில் ஒரு சில பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது என்றும், ஆராய்ச்சியில் ஈடுபடும் பட்டதாரி மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சி வேலையை பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து விட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# ஆடி அமாவாசை

இம்மாதம் திங்கட்கிழமை ஆடி அமாவாசை தினமாகும். பித்ரு காரியங்கள் செய்வதற்குரிய தினம் என்று பலருக்கும் தெரிந்திருக்கும். அமாவாசைக்கு முந்தைய தினமும் சிறபபானதாகும். அன்றைய தினம் ஒரு கதையைப் படித்த பிறகு மறுநாள் அமாவாசையன்று விரதமிருக்கும் பெண்கள் சவுமாங்கல்யத்துடன் வாழ்வார்கள்.

ஆடி அமாவாசை விரதமிருப்பவர்கள் அருகிலிருக்கும் கடல், ஆறு போன்ற நீர் நிலைகளில் குளித்து இறந்த முன்னோர் களுக்காகத் தர்ப்பணம் செய்தல் சிறந்தது.

அதே நேரம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவமும் அன்றைய தினமே நடைபெறுகின்றது. அதிகாலை 5.30 மணிக்கு சுவாமி தீர்த்தமாடுவதற்கு புறப்படுவார்.

மாலை 6.30 மணிக்கு கண்டகித் தீர்த்தத்துடன் இரண்டாம் ஜாமப் பூசையும் தொடர்ந்து அர்த்தசாமப் பூசையும் இடம் பெறும்.

## உலகம் வருங்காலத்தில் பெண்களால் தான் ஆளப்படும்

# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா

(கொழும்பு)

நவம்பர் மாதம் முதல் கிழமை நடைபெற உள்ள அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் வெற்றி பெற்றால், அவர் ஜேர்மன் நாட்டு ஜனாதிபதி அஞ்சலா மேர்கர் மற்றும் அண்மையில் நியமனம் பெற்ற பிரித்தானிய பிரதமர் தெராக்ஷா மே ஆகியோருடன் சேர்ந்து முழு உலகத்தையே ஆள்வார்கள்.

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தல் மிகவும் நெருக்கமான போட்டியாக அமைந்துள்ளது. முன்னளல் வெளிவிவகார அமைச்சராக இருந்த கிளின்டனுக்கும், குடியரசு கட்சியின் வேட்பாளரான டொனால் டிரம்ப் இடையில் கடும் போட்டி நிலவுவதாக ஜனாதிபதி கூறினார்.

அண்மையில் மிலாகிரியாவில் உள்ள சென்போல்ஸில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா பங்குபற்றினார். அங்கு பேசுகையில் உள்ளூரிலும் வெளியூரிலும் பெண்களின் பங்களிப் பின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் ஜேர்மன் ஜனாதிபதி மேக்கலன் ஆட்சி முறை பற்றியும் சிரியா அகதிகள் சம்பந்தமான அவரது அணுகுமுறை பற்றியும் அவர் குறிப்பிட்டார். ஜேர்மனியின் ஒரு பகுதியினரின் எதிர்ப்பின்



மத்தியில் தொடர்ந்து யுத்தம் நடைபெறுக் கொண்டிருக்கும் சிரியாவில் இருந்து மில்லியன் கணக்கான அகதிகளை அவர் தனது நாட்டில் ஏற்றுக் கொண்டது சம்பந்தமாக ஜனாதிபதி சிறிசேனா தனது பேச்சில் குறிப்பிட்டார்.

மேலும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன் ராஜினாமா செய்ததை அடுத்து தெராக்ஷே மே இங்கிலாந்து பிரதமராக வந்தது பற்றியும் விரிவாக கூட்டத்தில் பேசினார்.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பிரபா..

சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்டது.

மாற்று அரசியல் கருத்துக் கொண்டவர்களின் அரசியல் நடவடிகைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது. அதனைக் கருத்தில் கொண்டு அரசியல் அங்கீகாரமற்ற முன்னாள் அரசியல் கட்சிகளான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஈ.பி.ஆர் .எல்.எப், ரெலோ மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் போன்றவற்றுக்கும் ஏனைய அரசியல் அமைப்புகளுக்கும் அங்கீகாரம் வழங்கும் விதத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்று துளசி கூறினார்.

துளசி மேலும் கருத்து தெரிவிக்கையில்,

'ஆனால், யுத்தத்தின் முடிவில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனக்குத் தானே முடி சூடிக்கொண்டு தாம் தான் ஏக பிரதிநிதி என பினாத்திக் கொண்டுள்ளனர். நாட்டின் நல்லாட்சியில் பங்குதாரர் தாம் என மேடைகளில் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில் நல்லாட்சி அரசுக்குத் துணை போய் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக் கொண்டனர். எதிர்க் கட்சித் தலைவர் பதவியால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை செய்தார்கள்?

தொடர்ந்து துளசி பேசுகையில்:

இணக்க அரசியல் வரலாற்றில் இரண்டு தலைவர்கள் உள்ளனர். ஒருவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பெரும் தலைவர் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

மற்றவர் முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் ஏ .எச்.எம். அஷ்ரப்

நீண்ட கால போரினால் இழப்புகளைச் சந்தித்த இனத்தின் அரசியல் தலைவர்கள் எதிர்க் கட்சித் தலைவர், குழுக்களின் பிரதித் தலைவர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் போன்ற பதவிகளைப் பெறறுள்ளார். எமது இனத்தவர்களுக்கு அவர்கள் எந்தச் சேவையும் செய்யவில்லை. நல்லாட்சியின் பங்கு தாரர்கள் அரசுடன் சேர்ந்து எமது மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றி இருக்க வேண்டும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் எவையும் மக்களை இதுவரை சென்றடையவில்லை.

மத்திய அரசின் அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைவாக இரணைமடுக் குளத்தை ஆழப்படுத்தி தண்ணியை கொண்டு செல்வது, வெற்றிலைக்கேணி கடல் நீரை நன்நீராக்கும் திட்டம், ஒரு வீடு இருபத்திரண்டு இலட்ச ரூபா பெறுமதியான பொருத்து வீட்டுத் திட்டம் வவுனியாவில் 200 கோடி ரூபாவில் கட்டப்பட இருந்த பொருளாதார மத்திய நிலையம் மதி நுட்பமற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினால் கைவிடப்பட்டுள்ளது. மக்ளுக்குக் கிடைக்க வேண்டிய திட்டங்கள் கைவிடப் பட்டதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதுவரை வருத்தம் தெரிவிக்கவில்லை என்று துளசி கூறினார்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: வைகைப்புயல்வடிவேலுவைக் காணவில்லையே என்ன நடந்தது?**

**ந. சிவலிங்கம், மஸ்கெலியா.**

பதில்: எலியாக வந்து மீண்டும் பொந்துக்குள் ஒழிந்து விட்டார்.

**கேள்வி: கூட்டு எதிர்க்கட்சி நடத்தும் பாத யாத்திரையின் பிரதான நோக்கம் என்ன?**

**சி. அகல்யா, நீர்கொழும்பு.**

பதில்: அரசைப் பிடிப்பதுதான். ஆனால், நடக்குமா?

**கேள்வி: இலங்கைக்கு இந்தியா வழங்கும் திருவள்ளுவர் சிலைகளால் என்ன பிரயோசனம்?**

**சி. மலர், திருகோணமலை.**

பதில்: இந்தியக் கலாசாரத் திணிப்பாகக் கருத வேண்டி உள்ளது.

**கேள்வி: அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்?**

**க. நாதன், மட்டுவில்.**

பதில்: அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் ஆரம்ப நிலையில் உள்ளது.ஜோசியம் கூறுவதற்கான தருணம் இது அல்ல.

**கேள்வி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார். தமது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சிங்கள மாணவர்களின் பெற்றோர் கூறுகின்றனரே. உண்மை நிலை என்ன?**

**கி. ரமணன், கொழும்பு 12.**

பதில்: இலங்கையின் எந்த மூலையிலும் சிங்களவர்களும் தமிழர்களும் வாழ்வதற்கு உரிமை உண்டு. அந்த உரிமையை யாராலும் தடுக்க முடியாது. சிங்களவரும் தமிழரும் வாழ்வதற்கு ஒன்றிணைந்து வாழக்கூடிய மனநிலையை விதைக்க வேண்டும்.

**கேள்வி: பயங்கரவாதிகளின் தாக்குதல் ஐரோப்பிய நாடுகளில் அதிகரிக்க என்ன காரணம்?**

**ம. மாசிலாமணி, யாழ்ப்பாணம்.**

பதில்: 1453 ஆம் ஆண்டு துருக்கியில் கொன்ஸ்தாந்திநோபல் ஒட்டமன் இராஜ்ஜியத்தைக் கைப்பற்றியதையடுத்து கிறிஸ்தவர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் போராட்டம் நடத்தினர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அமெரிக்கா வல்லரசாக உருவானது. அரபுக்களின் மத்தியில் இஸ்ரேலை உருவாக்கி இஸ்லாமியர்களின் உணர்ச்சிக்கு மதிப்பளிக்கத் தவறியது. அது இஸ்லாமியர்களுக்கிடையிலும் ஐரோப்பியரகளுக்கிடையிலும் பூசலைத் தோற்றுவித்தது. இன்று ஐரோப்பியத் தலை வாசலில் பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறுகிறது.

**கேள்வி : அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிக்கு முரளி பயிற்சியளித்ததால் அவரைத் துரோகி என்று கூறலாமா?**

**டி. ரஞ்சன், வவுனியா.**

பதில்: ஆரம்பத்தில் இருந்தே இலங்கை கிரிக்கெற் சபை முரளிக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கத் தவறி விட்டது. ஒரு காலத்தில் முரளியின் பந்து வீச்சை தவறு என கூறிய அவுஸ்திரேலியா இன்று அவரை பயிற்சியாளராக்கியதால் அவரின் பந்து வீச்சு சரியானதென அர்ஜுண ரணதுங்க கூறியுள்ளார்.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

## உலகில்
# மூன்றாவது பெரிய பணக்காரன்




இவர் அமேசன் டொட் கொம்மின் பிரதம நிர்வாகியான W ஜெவ் பெசோஸ் Jeff bezos உலகில் மூன்றாவது பெரிய பணக்காரன் என அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை 3 ஆவது இடத்தில் இருந்த வறன் பவ்வற் (Warren buffet) வேற்ஜெயர் காட்வே கம்பனியின் தலைவர் ஆவார்.


52 வயதுடைய ஜெவ் பெசோஸ் அமேசன் டொட் கொம்மின் 18% பங்குகளின் உரிமையாளர். இவருடைய மொத்த சொத்துகளின் மதிப்பு அமெரிக்க டொலர் 65.3 பில்லியன் ஆகும்.

ஆனால் ஜெவ் பெசோஸ் மொத்த சொத்து மதிப்பு டொலர் 64.9 பில்லியன் ஆகும்.

தொடர்ந்தும் மைக்றோ சொவ்ற் கம்பனியின் உரிமையாளர்களில் ஒருவரான பில்கேட்ஸ் உலகின் முதலாவது பணக்காரராக இருந்து வருகிறார். இவருடைய மொத்த சொத்து மதிப்பு அமெரிக்க டொலர் 77.7 பில்லியன் ஆகும்.

2 ஆவது இடத்தில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அமாச்சியோ ஓரிரேக்கா உள்ளார். இவரது மொத்த சொத்து அமெரிக்க டொலர் 72.7 பில்லியன் ஆகும். அதேநேரம் முகநூல் கம்பனியின் பிரதம நிர்வாகி மார்க் சுக்கர் பேக் தர பணக்காரர் தர வரிசையில் 5 ஆம் இடத்தில் உள்ளார். அவரது மொத்த சொத்து அமெரிக்க டொலரில் 54 பில்லியன் ஆகும்.

இந்தசெல்வந்தர் தர வரிசைப் பட்டியலை போர்ப்ஸ் சஞ்சிகையை வெளியிட்டுள்ளது.







# கபாலியின் சாதனை



சுப்பர் ஸ்டார் ரஜினிகாநத் நடித்து வெளிவந்த கபாலி திரைப்பம் 12 000 திரையரங்குகளில் திரையிடப்பட்டு பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் பார்த்து பாராட்டப்பட்ட கபாலி திரைப்படம் வெளியிட்ட அன்று தொடக்கம் online ல் காட்டப்பட்டு வருகிறது.

tamilgun.net என்ற இணையத் தளத்தில் இந்த படம் online ல் காட்டப் படுகிறது. இந்த செய்தி போகும் வரை இந்தத் திரைப்படத்தை 5199 பேர் like செய்து இருக்கிறார்கள் என்று இந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

திரைப்படம் வெளியிட்ட 7 நாட்களிலே ரூபா 320 கோடியை வசூலித்தது என்று தெரிய வருகின்றது.

இந்த திரைப்படம் இந்திய வரலாற்றிலே கடந்த 100 வருட காலமாக வசூல் சாதனையை முறியடித்துள்ளது எனத் தெரிய வருகிறது.

கபாலி படம் தயாரிப்பதற்கு மொத்தமாக 100 கோடி செலவிடப்பட்டுள்ளது. ரஜினிகாந்திற்கு மாத்திரம் இந்தப் படத்தில் நடித்ததற்காக கலைப்புலி தாணு ரூபா 50 கோடி சம்பளமாக வழங்கினார் என்று தெரிய வருகிறது.

இனியும் ஒரு ஆயுதப் போராட்டம் என்ற வழிமுறையில் எமது அடுத்த சந்ததி ஈடுபடுவதற்கு முன்னர் எமது சொந்த அனுபவம் தந்த பாடங்களையும், ஏனைய போராட்டங்கள் தரும் பாடங்களையும் அவசியம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதனை எனது ஆத்மாவிலிருந்து கூறுகிறேன். இந்த நாட்டில் இனியும் ஒரு இரத்த ஆறு பாயக்கூடாது. எந்த அன்னையும் தன்து பிள்ளையைப் பெற்றெடுத்த வயிற்றிலும், பிள்ளையைசுமக்கும் பிரேதப் பெட்டியிலும் அடித்துக் கொண்டு அழக்கூடாது. எமது எதிர்கால சந்ததி தமது அறிவாற்றலால் மட்டுமே உலகை வென்றெடுக்க இடைவிடாது முயல வேண்டும். நவீன உலகத்தின் புதிய தரிசனங்களை அவர்கள் நேரடி யாக அனுபவிக்க வேண்டும். போர்க் களங்களில் உயிரைக் கொடுத்த வீரர்கள் ஒவ்வொருவரும் இந்த யுத்தம் எங்களோடு முடிந்து போகவேண்டும் என்றுதான் எண்ணினார்களே தவிர அடுத்த சந்ததிக்கும் அது தொடர வேண்டும் என அவர்கள் நினைத்திருக்கவில்லை.



**தமிழினி ஜெயக்குமரன் ஒரு கூர்வாளின் நிழல்கள் பக்கம் 8**

# சமூக விழிப்புணர்வுக் களம்

நேர்காணல் : வா.தயாளன்



## ஓர் அலசல்

# ஆங்கிலக் கல்வியின் அவசியம்

இன்றைய காலகட்டத்தில் ஒரு மனிதனின் வாழ்க்கையில் மொழி என்பது முக்கிய இடத்தை பிடித்துள்ளது. இந்த நாட்டில் சிங்களம், தமிழ் ஆகியன உத்தியோக மொழியாக இருக்கின்றன. ஆனால் தொடர்பு மொழியாக ஆங்கிலம் உள்ளது. ஆங்கில மொழி தொடர்பு மொழி மாத்திரம் அல்ல இணைக்கும் மொழி என்றும் சொல்லலாம். ஆங்கிலம் என்பது தேசிய ரீதியில் இணைக்கும் மொழியாக இன்று விளங்குகின்றது.

இலங்கையில் இன்று தமிழ், சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள். ஆனால் ஆங்கில மொழியில் கல்வி கற்கும் வசதிகள் சர்வதேச தரத்தில் உள்ள பாடசாலைகள் தான் எமது மாணவர்களுக்கு வழங்குகின்றன.

ஆங்கிலம் என்பது இந்தக் கால கட்டத்தில் கட்டாய மொழியாக மாறிவிட்டது. தமிழர்களைப் பொறுத்தவரையில் 'கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்தில் தான் மேய்க்க வேண்டும்" என்ற கொள்கை உள்ளவர்கள். அரசாங்க உத்தியோகம் இல்லை என்றால் வேலை அற்று இருப்பார்கள். அவர்களுக்கு தமிழைத் தவிர, சிங்களத்தைத் தவிர வேறு மொழிகள் தெரியாது எனவே அவர்கள் வேலை தேடும் முயற்சி விரிவாக்கப்படுவதில்லை. ஆங்கில மொழி தெரிந்தால் சர்வதேச ரீதியில் வேலை வாய்ப்பு கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

இது சம்பந்தமாக வவுனியாவில் அமைந்துள்ள றோயல் லீட்ஸ் (Royal Leads) பாடசாலையின் அதிபர் திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரனை சந்தித்தோம்.

இன்று ஆங்கில மொழி கட்டாய மொழியாக மாறி வருகின்றது என்று சொன்னார். இன்று பட்டதாரிகள் வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருப்பதற்கு காரணம், ஆங்கில மொழியில் அவர்களுக்கு போதிய ஆங்கில அறிவு இல்லாதது தான் என்று கூறினார்.

ஆங்கில அறிவு இருந்தால் பட்டதாரிகள் தங்கள் பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆனால் அவர்கள் தங்களுடைய திறமைகளை வெளிக்காட்ட முன் வருவதில்லை.

இந்த நாட்டில் சிகிரியாவிற்கு பிறகு, இந்த நாட்டில் எதையுமே யாரும் சாதிக்கவில்லை. காரணம் அவர்களின் அறிவு பரந்துபடாமல் போனதே ஆகும் என்று கூறினார்.

அதையடுத்து அந்த பாடசாலையில் உள்ள ஆசிரியர்களிடம் 'ஆங்கில கல்வி ஏன் அவசியம்" என்பது பற்றி வினாவிய போது அவர்கள் வருமாறு வருமாறு கூறினார்.

**திரு ஜலத்தியல் லோறன்ஸ்**

இவர் ஆசிரியராக ஹட்டன் நோர்வூட்டில் உள்ள நியூவலி வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். அங்கே இரண்டு வருட காலம் ஆசிரியர் பணியாற்றினார்.

அதையடுத்து அட்வெண்டிஸ் இன்ரநஷனல் ஸ்கூலில் 16 வருடங்களும், கிளிநொச்சியில் உள்ள றோயல் லீட்ஸ் ஆங்கில பாடசாலையில் ஒரு வருடமும் கல்வி கற்பித்தார்.



இவர் கருதது தெரிவிக்கையில்,

ஆங்கில மொழி கல்வி என்பது சமூகத்தில் அவசியம். ஏனெனில் நிறைய அறிவியல் சார்ந்த விட யங்களை கற்றுக் கொள்ள வும், உள்வாங்கிக் கொள்ள வும், ஆங்கில மொழி அவசியமானது. தகவல் சம்பந்தப்பட்ட ஊடகங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான் உள்ளன.

இன்றைய மாணவர்கள் மும்மொழி கல்வியில் ஆர்வமுடையவர்களாக உள்ளனர். ஆங்கிலம் ஒரு முக்கிய இணைப்பு பாடமாக அமைந்துள்ளது.

**கந்தசாமி குயிலி :**

ஒரு வருடத்துக்கு மேலாக ஊடகங்களில் பணிபுரிந்தவர் இன்று வவுனியா றோயல் லீட்ஸ் பாடசாலையில் பணிபுரிந்து வருகிறார்.

'ஆங்கில மொழிக் கல்வி மிகவும் அவசியமாக உள்ளது. தாய் மொழி தமிழாக இருந்தாலும் இன்றைய கால கட்டத்தில் ஆங்கில மொழி தேவைப்படுகின்றது. ஏனெனில் எமது தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் வாழ்வின் இலட்சியமாக வெளிநாடு செல்வதையே குறிக்கோளாக வைத்திருக்கிறார்கள். எனவே தான் சிறு பிராயம் தொடக்கம் ஆங்கிலக் கல்வி கற்பதில் ஆர்வமாக உள்ளனர். ஆங்கிலம் ஓர் சர்வதேச மொழி எனவே ஆங்கில அறிவு எமது பிள்ளைகளுக்கு மிக மிக அவசியம்.



**டாக்டர். நகுலேஸ்வரன் ஹரிஸ்வரன்**

இவர் உக்ரேன் நாட்டில் உள்ள ஹர் கைவே தேசிய மருத் துவ பல்கலைக் கழகத்தில் 6 வருடம் மருத்துவகல்வி கற்று பட்டம் பெற்ற வர். கடந்த ஒரு வருடமாக வவுனியா றோயல் லீட்ஸ் பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராக இருந்து வருகிறார்.



'ஆங்கில அறிவு உள்ளவர்களளால் தான் நவீன அறிவியலை வளர்த்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆங்கில மொழி அறிவு பரிமாற்றம் செய்வதற்கு வசதியான மொழியாக உள்ளது. எவர் ஒருவருக்கு ஆங்கில அறிவு உள்ளதோ, அவர் வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கும் பொழுது அவர் தெரிவு செய்யப்படுவதற்கு அந்த ஆங்கில அறிவு ஓர் சந்தர்ப்பமாக இருக்கும்" என்றார்.

**மீரா கிங்ஸ்லி :**

இவர் அட்வன்ரிஸ் இன்ரநஷனல் ஸ்கூலில் எட்டு வருடமாக ஆசிரியராகக் கட மையாற்றினார். இவர் ஒரு வருடமாக வவுனியா றோயல் லீட்ஸ் பாடசாலையில் ஆசிரியராக உள்ளார்.

ஆங்கில மொழியில் தான் இன்றைய கால கட்டத்தில் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட அறிவியல் தகவல்களும், உண்மைகளும் - எல்லாம் ஆங்கிலத்தில் தான் கிடைக்கின்றன. மேலும் கணினி மூலம் 'தேடிக் கற்க" வேண் டுமானால் ஆங்கில மொழி மூலமாக தான் கணினியில் வரும் தகவல்களைக் கற்ககூடியதாக வுள்ளது.





நகுலேஸ்வரன் கீதாஞ்சலி கிளிநொச்சியில் உள்ள றோயல் லீட்ஸ் ஆங்கில பாடசாலையினதும் வவுனியாவில் உள்ள றோயல் லீட்ஸ் ஆங்கில பாடசாலையிலும் அதிபராக உள்ளார். கிளிநொச்சி பாடசாலையில் 300 பிள்ளைகளும், வவுனியா பாடசாலையில் 200 பிள்ளைகளும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கிறார்கள்.

கீதாஞ்சலி கண்டியில் உள்ள லக் பஹன அட்வன்டிஸ் கல்லூரியும் செமினரியிலும் தனது ஆரம்ப பாடசாலையை கற்று பின்னர் டீயு பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். அவர் அதே கல்லூரியில் ஆசிரியராக வேலை செய்து பின்னர் வவுனியாலில் போதகர் எம்.ஏ. அலக்ஸ்சாண்டர் 28 பிள்ளைகளுடன் நடத்திய மொண்டசூரி பாடசாலையை எடுத்து நடத்தினார். இந்த பள்ளிக்கூடம் 2010 ஆம் ஆண்டில் க.பொ.த உயர் தரம் வரை வகுப்புகள் இருந்தன. மொத்தமாக 1700 பிள்ளைகள் படித்தார்கள். 1998ம் ஆண்டுக்கும் 2010ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த பாடசாலையில் மூன்று கட்டிடங்களை கீதாஞ்சலி நிர்மாணித்தார். மேலும் கட்டிட வேலைக்காக ரூபா 2 கோடி வங்கியில் இருந்தது என்றும் அந்த பணத்தை கேட்டு இயக்கங்கள் அச்சுறுத்தல் விடுத்தன. இறுதியில் அவரின் கணவரை போதகர் நகுலேஸ்வரனை கடத்தி சென்று விட்டார்கள் என்று தெரிய வருகின்றது. இன்று வரை போதகர் நகுலேஸ்வரன் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை என்று கீதாஞ்சலி தினச்செய்திக்கு தெரிவித்தார். 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் நடாத்த திட்டமிட்டிருந்த ஆங்கில கல்வி பாட திட்டங்கள் அடங்கிய மொண்டசூரி பாடசாலைகளுக்கு ஆலோசகராக கீதாஞ்சலி இருந்தார் எனத் தெரிய வருகிறது.இவர் தனது கணவன் காணாமல் போனதையடுத்து அரசியலில் ஈடுபட்டிருந்த போதிலும் அவர் தீவிரமாக கல்வி ஆசிரியராகவே இன்று வரை இருந்து வருகிறார். 2010 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் - றோயல் லீட்ஸ் ஓர் ஆங்கில பாடசாலையை கட்டி இயக்கிக் கொண்டு வருகிறார். 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வவுனியாவிலும் இதே பாடசாலையை ஆரம்பித்தார். எதிர்கால திட்டங்கள் பற்றி குறிப்பிடுகையில் மதவாச்சியிலும் இந்த பாடசாலை ஆரம்பிப்பது என்றும் மன்னார், முல்லைத்தீவு பகுதியிலும் இதேபோன்று பாடசாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தினச்செய்திக்கு கூறினார்.



(தொடர்ச்சி 18 இல்)



# சொன்னார்கள் சொன்னார்கள்

கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி வரவிருக்கின்ற பாதயாத்திரையானது, சிங்கள மக்களை உசுப்பிவிடுவதற்கான இன வாத பாதயாத்திரையாகும். இப்பாத யாத்திரையின் போது புதியஅரசியலமைப்பு முயற்சிகள், போர்க்குற்றங்கள் ஆகியவை தொடர்பில் கோஷங்கள் எழுப்பிக் கொண்டு கொழும்பை நோக்கி இவர்கள் வர முயல்கிறார்கள். இதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ், முஸ் லிம் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்" என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச் சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.




உண்மையான சமாதானத்தை அடைந்துக் கொள்வதற்காக இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு கனடா தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ருடு தெரிவித்துள்ளார்.



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன், ஒரு சிறந்த இலங்கைக் குடிமகன் எனவும் அவர் தனது நாட்டை விரும்பும் ஒருவராகவும் பயிற்றுவிப்பாளராகவும் திகழ்கிறார் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில்,மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலை 'துரதிர்ஷ்ட வசமான சம்பவம்' என வர்ணித்த எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வருமான இராஜவரோதயம் சம்பந்தன், இச்சம்பவம் தொடர்பாகக் கவனஞ் செலுத்தும் போது, ஏனைய பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் விடயங்கள் குறித்தும் அரசாங்கம் கவனஞ்செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். புதுமுக மாணவர்களை வரவேற்கும் இந்நிகழ்வில் இடம் பெற்ற இவ்வாறான சம்பவங்கள் தவிர்க்கப்படலாம் எனத்தெரிவித்த அவர், புரிந்துணர்வின்மை காரணமே யாழ். சம்பவம் இடம்பெற்றதாகவும் அதிர்ஷ்ட வசமாக, இந்நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டதாகத் தெரிவித்தார்.






கடந்த 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மாகாண சபை தேர்தல் பரப்புரையின் போது பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய வழக்கில் திங்கட் கிழமை பிணை வழங்கியுள்ள நீதிபதி இளஞ் செழியன், அரசியல்வாதிகள் மத்தியில் இனி மேல் துப்பாக்கிக் கலாசாரத்தை அனுமதிக்க முடியாது என எச்சரிக்கை செய்துள்ளார். இந்தச் சம்பவத்தில் சந்தேக நபரான அப்போதைய வேட்பாளராகிய குமார் சர்வானந்தன் என்பவர் கடத்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டு கடந்த நான்கு மாதங்களாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

நல்லாட்சி அரசைக் கவிழ்த்து தான் மீளவும் பதவிக்கு வரலாமென கனவு காணும் மஹிந்த ராஜபக்ச, எந்த முயற்சிகளாலும் தற்போதைய அர சாங்கத்தின் நல்லிணக்க செயற் பாடுகளை தடுத்து விட முடியாது. அவரின் குந்தகமான செயற் பாடுகளுக்கு சிங்கள மக்கள் உடன் படப் போவதுமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்ற நிலையில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பிற்காக, இராணுவத்தினரை நிறுத்த வேண்டிய அவசியமில்லை என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.



தேசிய அரசாங்கத்தை இரண்டு ஆண்டுகளுடன் கலைப்பது நாட்டின் நிலைமைகளை குழப்பும் செயலாகும். எனவே ஐந்து ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீட்டிப்பது தொடர்பில் இலங்கை சுதந்திரக்கட்சி ஆராயும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.



# அட அப்படியா?

**- ராஜேஷ் மணாளன் -**

இன்று பலராலும் விரும்பி அருந்தப்படும் கொக்கோ கோலா என்ற மென்பானம் உண்மையில் ஒரு மருந்தாகவே 19 ஆம் நூற் றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் உற்பத்தி ஆரம்பித்து 130 வருடங்கள் ஓடி விட்டன. இதைத் தயாரிக்கும் (formula) கலவை இரகசியம் மிகப்

## இரகசியம் பரம இரகசியம்

பாதுகாப்பாகஅமெரிக்காவின் ஜோர்ஜியா மாவட்டத்தில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. 1888 இல் கோலாவை மக்களிடையே அறிமுகப்படுத்த ஆளுக்கொரு கிளாஸ் கோலா இலவசமாகவழங்கப்பட்டது.







ரஷ்யாவில் Krasnoyarsk என்னும் நகரிலுள்ள ஒரு இளம் பெண்ணிடம் நீங்கள் ஒரு Iphone க்காக எதுவும் செய்யத் தயாரா என்று கேட்கப்பட்டது. இந்த அழகிய இளம்பெண்ணை அங்கு முன்பு ஒரு டசினுக்கு மேற்பட்ட இளம் பெண்களிடம் இதே கேள்வி கேட்கப்பட்டு அவர்கள் மறுத்துள்ளார்கள். Kaseniya என்ற இளம்பெண்ணிடம் ஒரு Iphone க்காக நீங்கள் உள்ளாடைகளுடன் தெரு வில் நிற்கத் தயாரா என்று கேட்கப்பட்டது. பொதுமக்கள் புழங்காத இடமொன்றில் ஏரிக்கருகே அப்படி நிற்கத் தயார் என்று சொல்லி உள்ளாள் இளம் பெண். வாக் களித்தபடி ஒரு கார் அருகில் அவள் உள்ளாடையுடன் நிற்க அவளிடம் ஒரு பிளாஸ்டிக் can நிறைந்த எண்ணெய் கொடுக்கப்பட்டு அவள் உடல் முழு வதும் அதை அவள் பூச, வீடியோ படம் எடுக்கப்பட்டது. அதன் முடிவில் ஒரு புதிய ஐபோன் 5S சன்மானமாக அளிக்கப் பட்டது.

# படு அமர்க்களமாக இருக்கும் உலக விமான நிலையங்கள்

உலகிலே தினமும் வந்து போகும் பயணிகள்தொகையைப் பார்த்து முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெறுவது கீழ்காணும் விமான நிலையங்கள்தான்.

1. அமெரிக்கா :Hartsfield-Jackson Atlanta International Airport (ATL): 101,491,106 passengers in 2015
2. சீனா : Beijing Capital International Airport (PEK): 89,938,628 passengers in 2015
3. யூ.ஏ.ஈ. : Dubai International Airport (DXB): 78,010,265 passengers in 2015
4. அமெரிக்கா : Chicago O'Hare International Airport (ORD): 76,949,504 passengers in 2015
5. ஜப்பான் : Tokyo International Airport (HND): 75,316,718 passengers in 2015



## பிரேசிலின் பாம்புத் தீவு

உலகின் மிகக் கொடிய விஷ முள்ள பாம்பு எங்கே உள்ளது என்று தெரியுமா? Ilha de Queimada Grande என்று அழைக்கப்படும் பிரேசிலின் கடற்கரை ஓரம் உள்ள இத் தீவில் கற்பாறைகளும் உண்டு. மழைக்காடும் உண்டு. Golden lancehead viper என்ற பெயர் கொண்ட கொடிய விஷப்பாம்பு இங்கே ஏராளம். 110 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இத்தீவுக்கு செல்ல கடற்படை அதிகாரிகள் எவரையும் அனுமதிப்பதில்லை.



# பாலசிங்கத்தின் நாடு கடத்தல் உத்தரவை ரத்து செய்யுமாறு பிரபாகரன் கோரிக்கை

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

1983 ஆம் ஆண்டின் பிற்பாடு தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணியினர் தங்கள் நாடாளுமன்ற பதவியைக் கைவிடத் தீர் மானித்தார்கள்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் நடை பெற்ற இனக் கலவரத்தையடுத்து ஜனாதிபதி ஜெயவர்தனா பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதில் முக்கியமாக கருதப் படுவன பிரிவினைவாதத்திற்கு எதிராக நட வடிக்கை ஆகும். தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணியினர் தமிழீழத்தைக் கோரி 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள்.

தமிழீழம் என்றால் பிரிவினைக்கு ஒப்பான ஒரு கோஷம் என இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முடிவெடுத்ததற்கு அமைய தமிழீழக் கோரிக்கையைத் தடை செய்யும் நோக்கத்துடன் நாடாளுமன்ற உறுப் பினர்கள் சகலரும் பிரிவினையை எதிர்த்து சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் 6 ஆவது திருத்த சட் டத்தை அறிமுகப்படுத்தியது.



ஆனால் 1983 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு தமிழர்களைப் பிரதிநி தித்துவம் செய்ய தமிழர் ஜக்கிய விடுதலை முன் னணியின் நாடா ளுமன்ற உறுப் பினர்கள் அரசி யல் சட்டத்தின் 6 ஆவது திருத்தத்திற்கு அமைவாகச் சத்தியப்பிரமாணம் செய்ய பின் வாங்கினார்கள்.

இந்த 6 ஆம் திருத்தம் 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி அமுலுக்கு வந்தது. எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் 6 ஆம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டதன் பிர காரம் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண் டும். அது அரசியல் அமைப்பின் 7 ஆவது அட்டவணையாக வெளிவந்தது.

அந்த 7 ஆம் அட்டவணை வருமாறு குறிப்பிடுகின்றது,

157 அ(7) ஆம் உறுப்புரையும் 161(ஈ) III ஆம் உறுப்புரையும்

'............ ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பை உறுதியாகப் போற்றிக்காப்பேன் என்றும் இலங்கையின் ஆள் புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியா கவோ, மறைமுகமாகவோ இலங்கையிலோ, அல்லது இலங்கைக்கு வெளியோ ஆதரவு அளிக்கவோ, ஆக்கமளிக்கவோ, ஊக்குவிப்பு அளிக்கவோ, நிதி உதவுவோருக்கு ஊக்கு விக்கவோ, பரிந்துரைக்கவோ மாட்டேன் என்று பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கின்றேன் சத்தியஞ் செய்கின்றேன்."

மேல் குறிப்பிட்டவாறு சத்தியப்பிரமாணம் செய்வதில்லை என்று முடிவெடுத்ததால் தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணி நாடா ளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற கூட்ட தொடரை பகிஸ்கரித்தனர்.

நாடாளுமன்றத்தின் சட்ட விதியின் படி ஒரு உறுப்பினர் மூன்று மாதம் தொடர்ந்து, உரிய அனுமதியின்றி, நாடாளுமன்றக் கூட்டத்தை பகிஸ்கரித்தால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பார் என்று குறிப் பிடுள்ளது. அதன் பிரகாரம் தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தனர்.

அந்த காலத்தில் தமிழ் மக்களின் பிரச் சினைகள் பற்றி எடுத்துப் பேசுவதற்கு, அவர்கள் தெரிவு செய்த உறுப்பினர்கள் இல் லாத நிலையால், அவர்கள் இடத்தை பிர ஜைகள் குழு இட்டு நிரப்பின. ஒவ்வொரு ஊர் மக்கள் ஒன்று கூடி அவர்களுடைய ஊரி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பிரயைகள் குழுக்களை அமைத்தார்கள்.

இந்த பிரஜைகள் குழுக்களே தமிழ் மக்களின் குறிப்பாக வடமாகாண தமிழ் மக்களின் பிரச்சனைகளையும், அவர்களுக்கு எதிராக ஆயுதப் படைகளால் இழைக்கப்படும் கொடுமைகளையும் அரசாங்கத்திடமும், இராணுவத்திடமும் மக்கள் கருத்துக்களை எடுத்துரைப்பது அவர்களின் பணியாக இருந்தது.

இந்தக் காலத்தில் தான் இராணுவத்தின் அட்டகாசம் தாங்க முடியாதிருந்தது. இது இந்நிய பிரதமர் ராஜீவ் காந்தியின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டது. இது சம்பந்த மாக ராஜீவ் காந்தி தொலைபேசியில் இல ங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவை தொடர்பு கொண்டு முல்லைத்தீவு மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பேசினார்.

இலங்கை இராணுவத்தால் முல்லைத்தீவு மக்கள் படும் துன்பம், துயரங்கள் பற்றி ராஜீவ் காந்தி எடுத்துக் கூறிய பொழுது, அத்தகைய பிரச்சினைகள் இலங்கையில் இல்லை என்று மறுத்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது மறுப்புக்கு ஆதரவாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. ஞானச்சந்திரனை ராஜீவ் காந்தியுடன் தொலைபேசியில் இணைத்து விட்டார். அதையடுத்து அர சாங்க அதிபர் ஞானசந்திரன் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறியதை உறுதிப்படுத்தும் விதத்தில் பேசினார்.

அரசாங்க அதிபர் ஞானசந்திரன் ஜனா திபதி ஜெயவர்த்தனாவுக்கு ஆதரவாக ராஜீவ் காந்தியுடன் தொலைபேசியில் பேசினார் என்ற விடயத்தை தொலைபேசி தொடர்பு நிலையத்தின் கடமையாற்றிய தமிழ் ஊழியர் ஒருவர் அந்த சம்பாசணையை ஒட்டுக் கேட் டார் என்றும், அவரே விடுதலைப் புலிகளுக்கு ஞானசந்திரன் சம்பந்தமான விபரங்களை வழங்கினார் என தெரிய வந்தது. அதை யடுத்து 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஞானச்சந்திரன் கொலை செய்யப்பட்டார்.

மேலும் நாட்டில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என விரும்பிய சென் ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் சி. ஆனந்த ராஜா 25 யூன் 1985 ஆம் ஆண்டு விடுதலை புலிகளால் கொலை செய்யப்பட்டார்.

திரு. ஆனந்தராஜா யாழ்ப்பாண பகுதியில் இராணுவத்திற்கும் பொது மக்களுக்கும் இடையில் நல்லுறவு உருவாக வேண்டும் என்பதனை, முன்னிட்டு யாழ்ப்பாண பாட சாலைகளுக்கும், இராணுவத்திற்கும், இடையில் கிரிக்கெட், போட்டியை ஒழுங்கு படுத்தினார். தமிழ் மக்களை இராணுவத்திற்கு காட்டிக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அவர் கொலை செய்யப்பட்டார்.

அந்தக் காலத்தில் யூன் 18 ஆம் திகதியில் இருந்து மூன்று மாதத்திற்கு யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த காலத்தில் தான் ஈழ தமிழர் தேசிய முன்னணியினர் டெல்லிக்கு அழைக்கப்பட்டார்கள். அங்கே அவர்கள் றொமேஷ் பண்டாரியுடன் இரண்டு சுற்று பேச்சுவார்த்தை நடாத்தினார்கள்.

அதையடுத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்களான பிரபாகரன், சபாரட்ணம், பத்மநாபா,பாலகுமார் ஆகியோர் டெல்லியில் வைத்து ராஜீவ்காந்தியை சந் தித்தார்கள். அந்த சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தை நாடு கடத்திய சம்பந்தமாக மறுபரிசீலனை செய்யுமாறு ராஜீவ்காந்தியிடம் வேண்டுகோள் விடுத்தார். அவரை நாடு கடத்தியது தவறு என பிர பாகரன் சுட்டி காட்டினார்.

ராஜீவ் காந்தியிடம் பிரபாகரன் பேசும்பொழுது 'தமிழீழ விடுதலை புலிகள் சம்பந்தப்பட்ட சகலதையும் நானே செய்கிறேன், அது சம்பந்தப்பட்ட திட்டமிடுகிறேன் சிந்தித்து உருவாக் குகிறேன். சகலதை யும் நானே செய்கி றேன்."



"மேலும் எனக்கு ஆங்கில அறிவு குறை வான காரணத்தால் என்னுடைய கருத்துக் களை திரு. அன்ரன் பால சிங்கம் எடுத்துரைப்பார். அவர் என்னுடைய கருத்துக் களை சொல்வதைத் தவிர அவர் எந்த விதத்திலும் தன் சிந்தனை செல்வாக்கை என் மீது செலுத்தவில்லை" என்று பிரபாகரன் கூறினார்.

மேலும் ஈழம் தேசிய விடுதலை முன் னணியின் தலைவர்கள் அடங்கிய தூது குழு டெல்லியில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது 1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20 ஆம் திகதி அம்பாறையில் ஒரு வீட்டில் சிலர் காணொளியில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த போது அங்கே இருந்த 15 தமிழர்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றார்கள். இறந்தவர்களுள் 2 சிறுவர்களும் தாய்மார்களும் அடங்குவர்.

அதற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரி விப்பதற்காக போராளிகள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை தாக்கினார்கள். இந்த தாக்குதல் மொத்தமாக 5 மணித்தியா லங்களுக்கு மேல் நடைபெற்றது. ஒரு ரக் வண்டி நிரம்பிய வெடி பொருட்களை வெடிக்க வைத்ததுடன் இந்த பொலிஸ் நிலைய தாக்குதல் முடிவுக்கு வந்தது. ஒன் பது பொலிசாரும், இராணுவதினரும் படு காயத்திற்கு ஆளானார்கள். மேற்படி தாக்குதல் யுத்தம் நடந்து கொண்டு இருக்கின்ற பொழுது இராணுவத்தின் ஹெலிகொப்ரர் வந்து குண்டு கள் போட்டன. அந்த தாக்குதல்களை தாங் கள் செய்யவில்லை என விடுதலை புலிகள் மறுத்தார்கள். இறுதியில் தமிழீழ இராணுவம் அந்த தாக்குதலுக்கான பொறுப்பெடுத்துக் கொண்டது.

1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டில் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம் அடைந்தது. தமிழ் மக்கள் தங்கள் ஒருமைப்பாட்டை தெரிவிக்கும் விதமாக ஆளும் கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகம் இந்த போராட்டத்தை ஆரம் பித்தது. அந்த போராட்டத்தின் முக்கிய அம்சம் என்ன வென்றால் சென்னை மெரினா கடற் கரையில் முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி. இராமசந்திரன் உண்ணா நோன்பு மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான எம். ஜி.ஆர். ரசிகர் கள் உண்ணா நோன்பு மேற் கொண்டார்கள்.

செப்ரெம்பர் 6 ஆம் திகதி அனு ராதபுரத்தில் இருந்து 6 கட்டை தள்ளி அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தை தாக்கினார்கள். அந்த தாக்குதலை அரசாங்கம் எதிர்த்து போராடியது. அந்தத் தாக்குதலின் போது 18 போராளிகள் கொல்லப்பட்டார்கள் என்று இராணுவம் அறிவித்தது.

2 ஆம் திகதி ஆகஸ்ட் 1985 ஆம் ஆண்டு ஈரோசின் தலைவரில் ஒருவரான சின்னத்தம்பி மகாதேவன் பாதுகாப்பு பட்டை யினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(தொடரும் ...)

அரசகேசரி




# போதைக்கு எதிரான போர்

## ஒரே மாதத்தில் 300 பேர் என்கவுண்டர்

நாட்டின் புதிய ஜனாதிபதி பதவியேற்றவுடன், 'நாட்டில் அமைதியான நல்லாட்சியை வழங்க வேண்டும்' என மக்கள் எதிர்பார்ப்பதும் ஆசைப்படுவதும் இயல்பு தான். ஆனால் பிலிப்பைன்ஸ் நாட்டின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரோட்ரிகோ டுடெர்டே (Rodrigo Duterte), தன் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கு எடுத்த முடிவு ஒட்டுமொத்தமாக, பிலிப்பைன்ஸ் முழுக்க அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இருக்கிறது.

**யார் இந்த ரோட்ரிகோ டுடெர்டே**

பிலிப்பைன்ஸ் அருகில் உள்ள மாசின் என்ற கடலோரக் கிராமத்தில் 1945 ஆம் ஆண்டு பிறந்தார் ரோட்ரிகோ டுடெர்டே. வழக்கறிஞரான அவரது தந்தை, மாகாண மேயராகவும் பதவி வகித்தவர். தாய் பள்ளி ஆசிரியை. 1972 இல் வழக்கறிஞர் பட்டம் பெற்று, சில காலம் வழக்கறிஞராக பணி புரிந்தவருக்கு, தந்தையைப் போல அரசியல் ஆர்வம் ஏற்பட்டது. 1986 இல் தவோ சிட்டியின் துணை மேயராகப் பதவியேற்றார்.

1988 ல் மேயர் பதவிக்கு போட்டியிட்டு தேர்வு செய்யப்பட்டார், பின்னர் மக்கள் நலனில் அதிக அக்கறையோடு செயல் பட்டார். அதன் பலனாக மீண்டும் மீண்டும், கிட்டத்தட்ட 2010 ஆம் ஆண்டு வரை, 22 ஆண்டுகளாக மேயர் பதவி வகித்தார்.

1990 களில், போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும், சூதாட்டம் மற்றும் விபசாரத்தில் ஈடுபடும் சமூக விரோதிகளின் புகலிடமாகவே தவோ சிட்டி இருந்தது. நகரத்தில் நடைபெறும் குற்றங்களுக்கும் இதற்கும் தொடர்பு உள்ளதை அறிந்தவர், அதைசரிசெய்யகையில்எடுத்தஆயுதம்தான் "என்கவுன்ட்டர்." இதற்கென தனியாக குறி பார்த்து சுடக்கூடிய ஒரு படையை அமைத்தார். சில சமயங்களில் இவரே தனியாக ரோந்து செல்வார். கண்ணில்படும் போதை மருந்து வியாபாரிகள், ரவுடிகள் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டனர். வேறு தவறுகள் செய்பவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். அவர் களுக்கு கடும் தண்டனை வழங்கப் பட்டது.

இதற்கு மனித உரிமை ஆர்வலர்களிடையே பலத்த எதிர்ப்பு எழுந்தது. ஆனால் அதை ரோட்ரிகோ கண்டு கொள்ளவே இல்லை. அவருக்கு, எப்படியாவது நகரத்தில் நடைபெறும் குற்றங்களை குறைக்க வேண்டும் என்பதே ஒரே குறிக்கோளாக இருந்தது. அதன் பலனாக தவோ சிட்டியில் குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந் தது.

இதையடுத்து நாடு முழுவதும் ரோட்ரிகோவுக்கும், அவருடைய அதிரடி முடிவுகளுக்கும் மக்களிடையே ஆதரவு பெருகியது.

**நாட்டின் ஜனாதிபதியானார் ரோட்ரிகோ**

இந்நிலையில் 2015 இல், அடுத்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார். இதனால் மக்களிடையே ஆதரவும், குற்றம் புரிவோரிடத்தில் எதிர்ப்பும் ஒரு சேர எழுந்தன.

உடனே, 'அவர் மனிதாபிமானமற்றவர், நீதிமன்றங்களை மதிக்காதவர், சட்டவிரோதமாக கொலைகளைச் செய்பவர்' என்றெல்லாம் ஊடகங்கள் மூலமாகவும் பிரசாரம் மூலமாகவும் ஒரு தரப்பினர் தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஆனால் கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் 16,601,997 (39.01%) வாக்குகள் பெற்று பெரும்பான்மையாக அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார்.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி, பிலிப்பைன்ஸின் 16 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்ற பின்பு, "போதைக்கு எதிராக போர்" ஒன்றை உடனடியாக தொடங்குமாறு ராணுவத்திற்கும், காவல்துறைக்கும் உத்தரவு பிறப்பித்தார். அவர்களுக்கு சுட்டுக் கொல்வதற்கான அதிகாரங்கள் வழங்கப் பட்டன. சட்டங்கள், விதிமுறைகள் தளர்த்தப் பட்டன.

போதை மருந்து வியாபாரிகள், குற்றவாளிகள் என பலர் நடு ரோட்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரவு நேர தாக்குதல் தீவிரமடைந்தது. நாடு முழுவதும் குற்றவாளிகளின் உடல்கள் நடுரோட்டில் கிடந்தன.

ரோட்ரிகோ பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள்ளாக என்கவுண்டர்களின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியது.

என்கவுண்ட்டர்களுக்கு பயந்து போதை தொழிலை விட்டுவிட்டு சரணடைபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ரோட்ரிகோ பதவியேற்று ஒரு மாதம் ஆகும் நிலையில், சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 300 ஐ கடந்து விட்டது. அதே சமயம் சரணடைபவர்களுக்கான முகாமில் சரணடைப வர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. இதற்கு பிலிப்பைன்ஸ் மக்களிடையே ஆதரவு இருந்தாலும், உலக அரங்கில் மனித உரிமை ஆர்வலர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் என்ன ஆனாலும் நாட்டில் போதை பொருள் சாம்ராஜ்ஜியத்தை வேரோடு அழிக்கும் வரை போதைக்கு எதிரான போரை நிறுத்தப் போவதில்லை என பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுட்டெர்டே அறிவித்துள்ளார்.

# நாட்டுக்கு பாரிய பங்களிப்புச் செய்த மூதூர்



(எப். முபாரக்)

மீன்பிடி,உல்லாசத்துறை,பொருளாதாரத்துறை என ,ன்னும் பல துறைகளில் ,ப்பிரதேசம் நாட்டின் பொருளாதாரத்திக்கு பாரிய பங்களிப்புச் செய்கின்றன அதேவேளை ,ப்பிரதேசத்தின் பௌதீக வளங்களை மேம்படுத்த பாரிய செயற்றிட்டங்களை உருவாக்கியுள்ளோம் என மூதூரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் ,லங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான,கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஸ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு 34 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மூதூர் நீதிமன்ற கட்டடத்தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது நல்ல மனிதர்கள் உருவாக வேண்டுமென்றால் ,ந்த நாட்டில் சட்டத்துறை சிறப்பாக செயற்பட வேண்டும் ஆகவே நேர்மையான முறையில் நீதிச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் நீதித்துறையில் தேங்கிக் கொண்டிருக்கும் வழக்குகளை தீர்த்துத் தருவதற்கான விதப்புரையை எனக்கு பெற்றுத்தர வேண்டுமென தனதுரையில் கேட்டுக் கொண'டார்.

பொதுமக்களின் நலன்கருதி ,த்துறையை மேம்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் உச்ச கட்ட நிதியியை செலவிட அரசாங்கம் தயாராக ,ருக்கின்றது.ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களையும்,கடமைகளையும் மனசாட்சிக்கு விரோதமில்லாத வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

# விளையாட்டு திருவிழா

## றியோ நகரில் 5 ஆம் திகதி தொடங்க இருக்கிறது

ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை பிரேசில் நாட்டின் தலைநகரமான றியோவில், 2016 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கையில் இருந்து 7 வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகின்றார்கள். மிகுதி மூவரும் போட்டியில் பங்குபற்று வதற்கு ஸ்ரீலங்கா தேசிய ஒலிம்பிக் சங்கம் தெரிவு செய்துள்ளது.

இந்த ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் பிரேசிலில் உள்ள 33 இடங்களில் நடைபெற உள்ளன.

இந்த ஒலிம்பிக் போட்டிகளில் போதை மருந்து சம்பந்தமான பரிசோதனையை அடுத்து ரஷ்ய விளையாட்டு வீரர்கள் தடை செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் முதலாக 1948 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் டங்கன் வைற் என்ற வீரர் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் இரண்டாவதாக வந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

மேலும் 2000 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியா சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுசந்திக்கா ஜெயசிங்க வெண்கல பதக்கம் வென்றார்.

இரண்டாமிடத்தில் வெற்றி பெற்ற வீராங்கனை தடை செய்யப்பட்ட போதைப் பொருள் பாவித்ததால் வெள்ளிப் பதக்கம் பறிக்கப்பட்டு சுசந்திகா ஜெயசிங்காவுக்கு வழங்கப்பட்டது.

## பத்திரிகையில் பணிபுரிவதற்கு

ஓர் ஆண்டு நிறைவடைந்ததை அடுத்து வாரமலராக வெளிவந்துகொண்டிருக்கும் தினச்செய்தியில் பணிபுரிவதற்கு பல்வேறு துறைகளிலும் அனுபவமும் தேர்ச்சியும் உள்ளோர் தேவைப்படுகின்றார்கள்.

+ செய்தி ஆசிரியர்
+ உதவி ஆசிரியர்
+ பக்கவடிவமைப்பாளர்
+ கணனி விற்பன்னர்கள்
+ நிருபர்கள்
+ விளம்பரமுகவர்கள்
+ பத்திரிகை விற்பனையாளர்கள்

உங்கள் சுயவிபரக் கோவையை

thinacheithi@hotmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


தபாலில் அனுப்ப விரும்புவோர் :


**தினச்செய்தி,**
**தில்லைகட்டி வீதி,**
**சுன்னாகம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 071 976 4514

தினச்செய்தி நிர்வாகம்





# சிறுவர் பக்கம்

## வாரமொரு குறள்



*குறள் 40*

*செயற்பால தோரும் அறனே ஒருவற்கு*
*உயற்பால தோரும் பழி.*

**பொருள்**

பழிக்கத் தக்கவைகளைச் செய்யாமல் பாராட்டத் தக்க அறவழிச் செயல்களில் நாட்டம் கொள்வதே ஒருவர்க்குப் புகழ் சேர்க்கும்.


## விடுகதைகள்

1. ஆடி ஆடி நடப்பான்... அகிலம் அதிர நடப்பான்... இவன் யார்?
2. ஆவணி பிறப்பது எதனாலே? நடனம் முடிவது எதனாலே?
3. ஆண்டுதோறும் வரும் வரி... அடுத் தடுத்து வரும் வரி... இவை என்ன?
4. உயிரோடு இருந்தால் சிவப்பு... இறந்து விட்டால் கருப்பு... இவன் யார்?
5. முப்பத்து இரண்டு காவலாளிகள்... நடுவிலே ஒரு வாயாடிப் பெண்... அவள் யார்?
6. மூடாத தொட்டியில் எடுக்க எடுக்க நீர்.... இது என்ன?
7. நாக்கு இல்லாதவன். நல்லது சொல்லு வான்... இவன் யார்?
8. போன ரயில் திரும்ப வராது... இது என்ன?
9. பரந்த காட்டேரிக்கு பக்கமெல்லாம் சடை... இது என்ன?
10. ஒற்றைக் கால் மனிதனுக்கு எட்டுக் கை... இவன் யார்?

**விடைகள் :**
1. யானை
2. ஆடி முடிவதால்
3. ஜனவரி, பிப்ரவரி
4. நெருப்பு
5. பற்கள், நாக்கு
6. கிணறு
7. புத்தகம்
8. உயிர்
9. ஆலமரம்
10. குடை

## உப்பின் நிறம் கறுப்பு

"உப்பின் நிறம் என்ன?" என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்? உப்பின் நிறம் வெள்ளைதான். ஆனால், கறுப்பு உப்பும் இருக்கிறது. இது, பாறையிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. வெள்ளை உப்பில் இருப்பதைப் போல கறுப்பு உப்பிலும் சோடி யம் குளோரைடுதான் (Sodium Chloride) இருக் கிறது. கடல் உப்பைவிட இதில் சோடியம் குறைவு. வட இந்தியர்கள் கறுப்பு நிற உப்பை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இளம் சிவப்பு நிறத்திலும் கறுப்பு உப்பு இருக்கிறது. கறுப்பு உப்பில் சோடியத்தின் அளவு குறைவாக இருப்பதால் செரிமானம், ரத்த அழுத்தத்தை சீராக வைத்தல் போன்றவற்றுக்காக இதைப் பயன்படுத்துகின்றனர். வெள்ளையோ, கறுப்போ எந்த உப்பு என்றாலும் அளவோடு பயன்படுத்துவதே நல்லது.



## ஏன் உருகுகிறது? எரிகிறது?





ஒரு பிளாஸ்டிக் பொருளை எரியும் நெருப்பில் காட்டுங்கள். என்ன ஆகிறது? பிளாஸ்டிக் உருகி நெருப்பில் வழிவதைக் காண்பீர்கள். அடுத்ததாக ஒரு மரக்கட்டையை நெருப்பில் காட்டுங்கள். இப்போது என்ன நடக்கிறது? மரக்கட்டை பற்றி எரிவதைப் பார்க்கலாம். நெருப்பில் காட்டப்படுகிற பிளாஸ்டிக் ஏன் உருகி வழிகிறது? மரம் ஏன் உருகி வழியாமல் எரிகிறது? ஒவ்வொரு பொருளும் ஒரு குறிப்பிட்ட மூலக்கூறு அமைப்பைக் (Molecular Structure) கொண்டுள்ளது. இந்த அமைப்பில், மூலக்கூறுகள் அல்லது அணுக்கள் எளிய விசையினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. ஒரு பொருள் உருக வேண்டுமெனில், அதன் உருகுநிலை அளவுக்கு சூடுபடுத்தப்பட வேண்டும். பொருளைச் சூடுபடுத்துவதன் மூலம் அப்பொருளின் மூலக்கூறுகளை இணைத்து வைத்திருக்கும் எளிய விசை முறிக்கப்படுகிறது. அதாவது, வெப்பநிலை அதிகமாவதால் மூலக்கூறுகள் ஆற்றல்பெற்று தம்மை இணைத்து வைத்திருக்கும் அமைப்பை அழித்துவிடுகின்றன. பிளாஸ்டிக் சூட்டில் உருக இதுவே காரணம். ஆனால், மரக்கட்டை போன்ற பொருள்கள் உருகுநிலை அளவை அடைவதற்கு முன்பே காற்றில் உள்ள ஒட்சிசனுடன் கலந்து எரிந்து விடுகின்றன. எனவே மரம் உருகுவதில்லை.



# குறுக்கெழுத்துப் போட்டி - 13

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ☒ | 3 | 4 | ☒ |
| ☒ | 5 | 6 | ☒ | 7 | |
| 8 | ☒ | 9 | 10 | | ☒ |
| 11 | | ☒ | | ☒ | 12 |
| | ☒ | 13 | | 14 | ☒ |
| ☒ | 15 | | ☒ | 16 | |

**இடமிருந்து வலம்**

1. பிரபலமானவர்களுக்கு நிறுவுவது.
3. அதிகமான வீடுகளில் காலை உணவு.
5. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன்.
7. வீட்டு மிருகம்.
9. நிலத்திலும் நீரிலும் வாழ்வது.
11. நீர் நிலையில் வழுக்குவது.
13. காய்ந்த இலை (குழம்பியுள்ளது)
15. நீர் அள்ள உதவுவது.
16. தம்பியுடையான் இதற்கு அஞ்சான்.

**மேலிருந்து கீழ்**

2. நால்வகை நிலங்களில் ஒன்று. (தலைகீழ்)
4. வருடம் (குழம்பியுள்ளது)
6. தந்திரமுள்ள மிருகம் (தலைகீழ்ஞீ)
8. ரஜினியின் படம்.
10. தொக்கையானவர்களை இப்படி கூறுவர் (குழம்பியுள்ளது)
12. கரம்.
13. மூக்குள்ளவரை இது இருக்குமாம்.
14. முகத்தை அசிங்கமாக்குவது. (தலைகீழ்)

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடை களை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஒகஸ்ட் 11 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 13.08.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப்போட்டி - 11 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. தவளை
3. நாம்
5. கரி
7. சலங்கை
9. வாதம்
11. சத்தம்
13. சாது
14. கனினி

**மேலிருந்து கீழ்**

1. தகரம்
2. வரி
4. சலம்
6. சிகை
7. சதம்
8. தங்கம்
10. வாத்து
12. சனி

### சரியான விடையை எழுதியவர்கள்

1. சி. சிவகுமார், 198, கோவிலடி, மஸ்கெலியா.
2. ஆ. சந்திரா, புன்னாலைக்கட்டுவன்.
3. கி. பார்த்திபன், சரசாலை.
4. அ. ரஜீபன், கடற்கரை வீதி, திருகோணமலை.
5. சி. ராதாமணி, கொட்டாஞ்சேனை.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 13**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# அனுஷ்காவின் முதலீடு

அனுஷ்கா ஷர்மா தான் சம்பாதித்த பணத்தில் கொஞ்சமாக சினிமா தயாரிப்பிலும் முதலீடு செய்கிறார். ஏற்கனவே 'என்.ஹெச்.10" படத்தை தயாரித்த அனுஷ்கா, அடுத்து 'கனிடா' என்ற பெயரில் ஒரு படத்தை தயாரிக்கிறார். 'என்.ஹெச்.10" படத்தை இயக்கிய நவ்தீப் சிங் தான் இந்தப் படத்தையும் இயக்குகிறாராம். இளம் ஹீரோ அர்ஜுன் கபூரை நடிக்க வைக்கவும் முயற்சி செய்து வருகிறாராம். அனுஷ்காவும் ஒரு முக்கிய ரோலில் நடிக்கிறாராம்.





மலேசிய
பொலிவ
சரணை
ரஜி

தமிழ்ப் பெண்ணாக
இருந்தாலும் வரலட்
கைகொடுப்பது என்
மலையாளமும்,
கன்னடமும்தான். த
ஹிட்கூட கொடுக்க
இருக்க, கன்னடத்தி
'மாணிக்யா' சூப்பர்
தற்போது மலையாள
மம்முட்டியுடன் நடித்
படத்தைப் பார்த்தவ
வரலட்சுமியின் நடிப்
புகழ்வதால் ரொம்ப
புத்துணர்ச்சியாக
இருக்கிறாராம். அ
வேகத்தோடு தமிழி
சீக்கிரமே வெற்றி
எனக் கூறுகிறாராம்.



நயன்
4 கே

# ஆங்கிலப் படத்தில் எமி

இங்கிலாந்து மொடலான எமி ஜாக்சன், தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் நடித்து வருகிறார். இவர் இப்போது முதல் முறையாக பிரிட்டிஷ் படத்தில் நடிக்க இருக்கிறார். தமிழில் ரஜினியுடன் '2.0' படத்தில் நடித்துவருகிறேன். இந்தப் படத்தில் எனது கேரக்டர் முற்றிலும் புதியதாக இருக்கும். அதற்கு இயக்குனர் ஷங்கருக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்தியில் சோஹைல்கான் இயக்கத்தில் நடித்துள்ள படம் செப் டெம்பரில் ரிலீஸ் ஆகும். இதையடுத்து இரண்டு பிரிட்டிஷ் படங்களில் நடிக்க இருக்கிறேன். பொலிவுட், கோலிவுட், டோலிவுட் என மூன்று வெவ்வேறு சினிமா துறையில் பணியாற்றுவது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார்.



# நிறையைக் குறைக்கும் விஜய்!

அழகிய தமிழ் மகன் படத்திற்கு பின், விஜய், இரு வேடங்களில் நடித்து வரும் படம், எங்க வீட்டு பிள்ளை. இப்படத்தில், அண்ணன் - தம்பியாக, நல்லவன் - கெட்டவனாக இரு வேடங்களில் நடித்து வருகிறார். இதில், ஒரு வேடத்துக்காக, தன் உடல் எடையை, 10 கிலோ வரை குறைத்து, “ஸ்லிம்“மாக நடிக்கிறார். அவ்வேடத்துக்கான காட்சிகள், படத்தின் மற்ற காட்சிகள் படமாக்கப்பட்ட பின், இறுதியில் படமாக்கப்பட உள்ளது.



## லசிய ாலிஸிடம் ணடைந்த ஜினி?

கபாலி திரைப்படத்தின் முடிவு ரஜினி ரசிகர்களிடையே பெரும் அதிருப்தியைக் கொடுத்துள்ள போதிலும், மலேசியாவில் வேறு விதமான முடிவை படத்தில் காட்டியுள்ளதாக ஒரு புதுத் தகவல் பரவி வருகிறது. மலேசியாவில் திரையிடப்பட்டுள்ள கபாலியில், கடைசியில் “இறுதியில் கபாலி பொலிஸில் சரணடைந்தார்” என்ற வாசகம் இடம் பெற்றுள்ளதாம். இதனால் இந்தியாவுக்கு ஒரு மாதிரியும், மலேசியாவுக்கு ஒரு மாதிரியும் முடிவு வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. ரஜினி - மம்முட்டி நடித்த தளபதி படத்திலும் கூட இப்படித்தான் கேரளாவில் வெளியான படத்தின் முடிவில் ரஜினி இறப்பது போலவும், பிற பகுதிகளில் வெளியான படத்தில் மம்முட்டி இறப்பது போலவும் வைத்திருந்தனர் என்பது நினைவிருக்கலாம்.



## கைவிட்ட தமிழ்

ப பெண்ணாக
தாலும் வரலட்சுமிக்குக்
காடுப்பது என்னவோ
யாளமும்,
டமும்தான். தமிழில் ஒரு
கூட கொடுக்க முடியாமல்
க, கன்னடத்தில் நடித்த
ரிக்யா’ சூப்பர் ஹிட்.
ாது மலையாளத்தில்
ட்டியுடன் நடித்த ‘கசாபா’
தைப் பார்த்தவர்கள்
சுமியின் நடிப்பை
பதால் ரொம்பவே
ணர்ச்சியாக
கிறாராம். அதே
தோடு தமிழிலும்
மே வெற்றி பெறுவேன்
கூறுகிறாராம்.



## மன் சம்பளம் கோடிங்கோ

நயன்தாரா 2005இல் கதாநாயகியாக அறிமுகமாகி 10 வருடங்களுக்கு மேலாக நம்பர் வன் கதாநாயகியாக வலம் வருகிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய 3 மொழிகளிலும் அவரது மார்க்கெட் உச்சத்தில் இருக்கிறது. காதல் சர்ச்சைகளில் சிக்கியபோது படங்கள் குறையும் என்று கணித் தனர். அதனை பொய்யாக்கினார். திரிஷா, பிரியாமணி, ஸ்ரேயா உள்ளிட்ட பல சம காலத்து நடிகைகள் நெருங்க முடியாத உயரத்தில் இருக்கிறார். சினிமாவில் அறிமுகமான புதிதில் நயன்தாராவின் சம்பளம் 40 மற்றும் 50 லட்சங்களாக இருந்தன. சில படங்களிலேயே அது ரூ.1 கோடியானது. அதன்பிறகு ரஜினிகாந்த், விஜய், அஜித்குமார், சூர்யா, ஆர்யா, தனுஷ், சிம்பு என்று முன்னணி கதாநாயகர்களுடன் ஜோடி சேர்ந்தார். தற்போது நயன்தாரா தனது சம்பளத்தை ரூ.4 கோடியாக உயர்த்தி இருப் பதாக பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது. மற்ற நடிகைகள் வாங் கும் அதிக பட்ச சம்பளம் ரூ.2 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.




# முகத்தில் உள்ள முடிகளை நீக்க...

பெண்களுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பது முகத்தில் தோன்றும் முடிகள் தான். சிறுசிறு முடிகள் முகத்தில் தோன்றி, முகத்தின் அழகை கெடுக்கும். இத்தகைய முடிகளை அகற்ற இக்காலத்தில் பெண்கள் எடுக்கும் முயற்சிகள் அதிகம். குறிப்பாக



முடிகளை நீக்க ப்ளீசீங் முறையைப் பயன்படுத்துகின்றனர். ப்ளீச்சிங் முறையில் முடிகளை அகற்றுவது சிறந்ததென்றாலும், இதனால் சருமம் உலர்ந்து வறட்சித் தன்மை ஏற்படும். வறட்சியான தோலில் பருக்கள், வெடிப்புகள் தோன்றும்.

ஆனால் இயற்கை முறையிலேயே கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி ப்ளீச்சிங் செய்யலாம். இதனால் முகத்திலுள்ள அழுக்குகள், தேவையற்ற முடிகள் நீங்குவதோடு, நல்ல ஆரோக்கியமான அழகையும் பெற முடியும்.

இயற்கையாக ஸ்கரப்கள் தயார் செய்வது எப்படி?

கடலை, மஞ்சள் தூள்: கடலை மாவு மற்றும் மஞ்சள் தூளுடன் கடுகு எண்ணெயைச் சேர்த்து பசைபோல ஆக்கி, அதை முகத்தில் பூசவேண்டும். முடிகள் இருக்கும் இடத்தில் இந்த கலவையை நன்றாக தேய்த்து நீரில் கழ்வவேண்டும். இம்முறையை தொடர்ந்து வாரம் இருமுறை செய்துவர முகத்தில் இருக்கும் அழுக்கு, முடிகள் நீங்கும்.

சர்க்கரை, சோளமாவு : முட்டையை உடைத்து ஒரு கோப்பையில் ஊற்றி, அதில் சர்க்கரை, சோளமாவை கலந்து நன்றாக கலக்கி, உருவான கலவையை எடுத்து முகத்தில் பூசி நன்றாக மசாஜ் செய்யவும். ஐந்து நிமிடத்திற்கு பிறகு முகத்தை குளிர்ந்த நீரில் கழுவ முகம் பளிச்... பளிச் ....

கடலை மாவு, தயிர், மஞ்சள்: இம்மூன்றையும் கலந்து பசைபோல் ஆக்கிக் கொள்ளுங்கள். பிறகு அதை இதமாக முகத்தில் நன்கு தடவி இருபது நிமிடங்கள் ஊற வைக்கவும். பிறகு பசும்பால் கொண்டு முகத்தை கழுவவும். பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை நன்றாக கழுவி, வெண்மை நிற துணியால் முகத்தை இதமாக துடைக்கவும். இப்பொழுது உங்கள் முகத்தை கண்ணாடியில் பார்க்க.. நீங்களே வியந்து போவீர்கள்..!!! இம்முறையை வாரம் இருமுறை தொடர்ந்து செய்துவர உங்கள் முகம் பால்போல் வெண்மையாக ஜொலிக்கும்.

தேன், எலுமிச்சை: தேனுடன் எலுமிச்சை சாற்றை கலந்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி இருபது நிமிடங்கள் ஊறவிட்டு, பிறகு குளிர்ந்த நீரில் முகம் கழுவ முகம் பட்டுப்போன்ற சருமத்தைப் பெற்று ஜொலிக்கும். முட்டை,



பீன்ஸ், கரட், முள்ளங்கி, பச்சை மிளகாய் எல்லாம் வதக்கி அரைக்கவும். தேவையான அளவு உப்பும், தேங்காயும் சேர்த்து சட்னி அரைத்தால் உடலுக்கு ஊட்டச்சத்து கொடுக்கும் சட்னி.

ஃப்ரீசரை சுத்தம் செய்தவுடன் லேசாக எண்ணெய் தடவவும். இதனால் அடுத்த முறை ஃப்ரிட்ஜை டீ-ஃப்ராஸ்ட் செய்யும் போது ஐஸ் படிமங்கள் சுலபமாக வெளியே வந்துவிடும்.

பிடிக்கொழுக்கட்டை செய்யும்பொழுது கொதிக்கும் நீரில் நன்றாக அரிந்த கரட், பீன்ஸ் மற்றும் பட்டாணி இவற்றையும் வேக வைத்து ரவையையும் ஊற வைத்து அரிசி மாவுடன் சேர்த்து வெஜிடபுள் கொழுக்கட்டை செய்யலாம். குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. ருசியாகவும் இருக்கும்.

கிரேவி அல்லது பீட்சா சோஸ் செய்யும் போது நீர்த்து விட்டதா? ஒரு பிரெட் ஸ்லைஸை உதிர்த்து, மிக்சியில் போட்டு பொடித்துக் கொண்டு கிரேவியில் சேர்த்தால், கெட்டியாகி விடும். சிலர் கார்ன்ஃப்ளாரை சேர்ப்பார்கள். கார்ன்ஃப்ளாரை அதிகமாக சேர்த்தால், சாஸ் பசை போலாகி விடும்.

# தலைப்பாரமா?

ஒரு சிலர் தலை பாரமா இருக்கு' என சொல்லக் கேட்டிருப்போம். இது சாதாரண விஷயமல்ல... சிலநேரம் நம் ஒட்டுமொத்த செயல்களையும் முடக்கிவிடக் கூடியது. தலையில் நீர் கோர்த்துக் கொள்வதால் உண்டாகும் இந்த தலை பாரம் தொடர்ந்து தலைக்கு குளிப்பதால் ஏற்படுகிறது என்று சிலர் நினைக்கின்றனர். அது தவறு...

ஒருவரின் தலையில் அளவுக்கு அதிகமாக தண்ணீர் கோர்த்துக் கொள்வதற்கு நிறைய காரணங்களை சொல்லலாம். தொடர்ந்து தலைக்கு குளிப்பதாலும் மழையில் நீண்ட நேரம் நனைவதாலும் தலையில் நீர் கோர்த்துக் கொள்வதாக பலர் நினைக்கின்றனர். இவை மட்டுமே காரணங்கள் அல்ல. வேறு சில காரணங்களாலும் தலையில் நீர் கோர்த்துக் கொள்ளும்.

நோய் எதிர்ப்பு சக்தி இன்மை, புகை மற்றும் காற்று மாசடைந்த இடங்களில் நீண்ட நேரம் இருப்பதாலும், மழை மற்றும் பனிக்காலங்களில் இரு சக்கர வாகனங்களில் அதிக தூரம் செல்லும்போது தலைக்கு எந்த பாதுகாப்பும் செய்து கொள்ளாமல் செல்வதாலும் தலையில் நீர் கோர்த்துக் கொள்கிறது. இதனால் வைரஸ் பரவுவதற்கும், பக்டீரியா தொற்று ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. தலையில் நீர் கோர்த்துக் கொள்ளும்போது மூக்கடைப்பு, தலைபாரம், இருமல், சளித்தொல்லை போன்றவற்றோடு தொடர் தும்மலும் வரக்கூடும்.

ஆண்களைவிட பெண்களுக்கே இந்தப் பிரச்சினை அதிகம் வரு கிறது. இதை வரும்முன் தடுப்பதுதான் சிறந்த வழி. மழை மற்றும் குளிர்காலங்களில் ஸ்வெட்டர், தலையை முழுவதும் மூடக் கூடிய தொப்பி போன்றவற்றை அணியாமல் வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதோடு சுக்குக் கோப்பி, இஞ்சி டீ, காய்கறி சூப் ஆகிய சூடான பானங்களை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். டாக்டர் அறிவுறுத்தும் மருந்து மாத்திரைகளை கவனத்துடன் சாப்பிட்டு வர வேண்டும்.

தலையில் நீர் கோர்த்துக் கொண்டு அவதிப்படுபவர்கள் முதலில் சைனஸ் வகைகளில் ஒன்றான ஞரைரெளவைளை பிரச்சினை இருக்கிறதா என்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். தங்களுடைய மூக்கு எலும்பான Nasal Septum வளைவில்லாமல் சரியாக உள்ளதா என்பதையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். மூக்கு வளைந்து (deviation) இருப்பவர்களுக்கு சைனஸ் பிரச்சினை அடிக்கடி ஏற்படக் கூடும்.

தலையில் நீர் கோர்த்துக் கொள்வதால் மூளைக்கு செல்லும் நரம்புகள் பாதிப்புக்கு உள்ளாகும் ஆபத்து உள்ளது. இதனால் உடலின் உள்ளுறுப்புகள் செயலிழக்க நேரிடும். எனவே, தலையில் அதிகமான நீர் தங்குவதால் ஏற்படும் சைனஸ், தொடர் தும்மல், இருமல் போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு சரியான தூக்கம் அவசியம். இவர்கள் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் அவசியம். பொரித்த உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

பிற நோய்களுக்காக எடுத்துக்கொள்ளும் மருந்து மாத்திரைகளாலும், அலர்ஜி காரணமாகவும் தலையில் நீர் கோர்த்துக் கொள்ளலாம். எதனால் இந்தப் பிரச்சினை வருகிறது என்பதை தெரிந்து கொள்ள அலர்ஜி ஸ்பெஷலிஸ்ட்டிடம் காண்பிக்க வேண்டும். குறிப்பாக, காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவரிடம் ஆலோசனை எடுத்துக் கொண்டு சிகிச்சையை தொடர வேண்டும்.



# ஆன்மீகம்



# குரு பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

பொன்னவன் என போற்றப்படக்கூடிய குரு பகவான் வாக்கிய சித்தாந்தப்படி துர் முகி வருடம் ஆடி மாதம் 10 ஆம் திகதி (2/8/16) செவ்வாய்க்கிழமை காலை 9.27 - 08.37 நாளிகைக்கு கன்னி ராசிக்கு பெயர்ச்சியாகி 2/9/17 வரை சஞ்சாரம் செய்யவுள்ளார். கன்னியில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக துலா ராசியில் 17/1/17 முதல் 10/3/17 வரை சஞ்சரிக்க உள்ளார்.

## மேஷம்



அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

செவ்வாய்க் கிரகத்தில் ஆதிக்கம் பெற்ற மேஷ ராசிக்காரர்களே இதுவரை உங்கள் ராசியை ஒன்பதாம் பார்வையாகப் பார்த்து வந்த இனி உங்களின் இரண்டாம் இடத்தையும் பத்தாமிடத்தையும் பன்னிரண் டா மிடத்தையும் பார்வையிடுகிறார்.

குரு பார்க்க கோடி நன்மை என்பதும் குரு எந்த வீட்டைப் பார்க்கிறாரோ அந்த இடம் சிறப்பாக அமையும் என்பதும் உண்மை. இது வரை உங்கள் உடல்நலத் தில் ஆரோக்கியம் இருந்து வந்தது. சனி உங்களுக்கு அட்டமத்துச் சனியாக இருப்ப திலிருந்து குரு பார்த்து பாதிப்பில் இருந்து காப்பாற்றி வந்தார். இனி கவனமுடன் செயற்படுவது அவசியமாகும்.

நீங்கள் விரும்பும் தொழிலைச் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உங்களுக்குப் புதிய செலவு வராமல் காத்துக் கொண்டிருப்பார். மேலும் உங்களின் ஒன்பதாம் இடத்து அதிபதியும் பன்னிரண்டாம் இடத்து அதிபதி யுமான குரு தனது விரய ஸ்தானத்தை பார்வையிடுவது உங்களுக்கு நல்லதல்ல. உங்கள் ராசிக்கு பகைக் கிரகம் என்பதனால் நீங்கள் தொடர்ந்து தட்சணாமூர்த்தியையும் நவக்கிரக குருவையும் வணங்கி வர வேண்டியது அவசியமாகும்.

## ரிஷபம்



கார்த்திகை 1, 2, 3 ஆம் பாதங்கள், ரோகினி மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

சுக்கிரன் ஆதிக்கம் பெற்று திறமையை வளர்த்துக் கொள்ளும் ரிஷப ராசி அன்பர் களே உங்களின் ராசிக்கு நட்புக்கிரகமான குரு பகவான் உங்களின் ராசியைப் பார் வையிடுவதும், உங்களின் ராசிக்கு ஒன்ப தாம் இடமான பாக்கிய ஸ்தானத்தியும் லாப ஸ்தானத்தையும் பார்வையிடுவதும் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் அமருவதும் இதுவரை இருந்துவந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு நல்ல மேன்மையையும் திறமையான ஈடுபாடுகளையும் உண்டாக்கும்.

சொந்தத்தொழில் செய்து வருபவர்க ளுக்கு இனி நல்ல வியாபார விருத்தியும் கொடுத்த இடத்திலிருந்து பணம் திரும்பி வரும் வாய்ப்புகளும் அமையும். உடல் நலனில் ஆரோக்கியமும் நோயாளிகளுக்கு மருத்துவ வசதி பெற்று விரைவில் குணம் அடையும் வாய்ப்பும் அமையும். உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் குரு அமருவதால் உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானம் பல மடையும்.

உங்களின் ராசிக்கு குரு பார்வை பெறுவதால் பரிகாரம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றாலும் நவக்கிரக குருவையும் தட்சணாமூர்த்தியையும் வணங் கினால் மேன்மை அடைவீர்கள்.

## மிதுனம்




மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திரு வாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

புதனின் ஆதிக்கம் பெற்றுத்திகழும் மிதுன ராசி நண்பர்களே, உங்கள் ராசிக்கு இதுவரை லாப ஸ்தானத்தையும் ஏழாமிடத்தையும் ஒன்பதாம் இடத்தையும் பார்வை செய்து வந்த குரு பகவான் இனி உங்களின் அட்டம ஸ்தானத்தையும் விரய ஸ்தானத்தையும் பார்வையிடுகிறார். இது வரை பல்வேறு நன்மைகளையும் சில சிரமங்களையும் அடைந்து வந்த நீங்கள் இனி சுபீட்சம் பெறுவதுடன் உண்மையான நிலைப்பாடுகளுக்கு ஆளாகும் நிலை உண் டாகும்.

உங்களின் ராசிக்கு நான்காம் இடமான கன்னியில் குரு அமர்வது தாயாரின் உடல் நிலை வாகனம் வீடு சுகம் போன்றவற்றில் சில சோதனைகளையும் உதவிகளையும் பெற்றுத்தருவார். குறுகிய காலத்தில் பல வளர்ச்சிகளை அடைவீர்கள். உங்களைப் பார்க்கக்கூட அஞ்சியவர்கள் இனி சரளமாக வந்து உங்களைப் பார்ப்பது உங்களுக்கு மன வருத்தத்தைத் தந்தாலும் தவிர்க்க முடியாது.

உங்களின் ராசி பரிகாரம் செய்ய வேண்டியது என்பதால் அடிக்கடி நவக்கிரக குருவைத்தரிசனம்செய்வதுடன்பௌர்ணமி அன்று சிவன் கோவில் சென்று மூன்று முறை வலம் வந்து சிவனைத் தரிசனம் செய்ய நன்மைகள் பல தேடிவரும்.

## கடகம்



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

சந்திரனின் ஆதிக்கம் பெற்று விளங்கும் கடக ராசி நண்பர்களே, உங்கள் ராசியில் உச்சம் பெறும் குரு பகவான் இதுவரை இரண்டாமிடமான ஸ்தானத்தில் இருந்து மறைவு ஸ்தானத்தைப் பார்வையிட்டு வந்ததால் வாழ்க்கையில் எதுவும் நினைத்த படி அமையவில்லை. இனி வெற்றியை இலக்காகக்கொண்டு செயற்படுவீர்கள் எனினும் உங்களின் ராசிக்கு மூன்றா மிடமான முயற்சி ஸ்தானத்தில் குரு அமர் வது நல்லதல்ல என்றாலும் பெரிய பாதிப் பைத் தராது.

உங்களின் லாப ஸ்தானத்தைக் குரு பார்வையிடுவதுநன்மையைஉண்டாக்கும். நீண்ட நாள் வசூலாகாமலிருந்த பணம் வசூலாகும். என்ன தொழில் செய்தாலும் லாபம் கிடைக்கும். தொழிலாளர்களின் வாழ்க்கை உயரும்.

பரிகாரம் செய்துகொள்ள வேண்டிய ராசி என்பதனால் நீங்கள் வியாழக்கிழமை தோறும் நவக்கிரக குருவையும் சுப்பிர மணியரையும் தொடர்ந்து வணங்கி வரு வது நல்லது.

## சிம்மம்



மகம், பூரம் உத்திரம் 1 ஆம் பாதம்

சூரியனின் ஆதிக்கம் பெற்று கம்பீரமாகச் செயற்படும் சிம்ம ராசி அன்பர்களே, உங்கள் ராசியில் இதுவரை ஜென்ம குருவாக இருந்து பல்வேறு சோதனைகளையும் மன அழுத் தங்களையும் தந்துவந்த குரு பகவான் இனி இரண்டாமிடத்தில் அமர்ந்து மறைவு ஸ்தானத்தையும் தொழில் ஸ்தானத்தையும் பார்வையிடுவது உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

உங்களின் தொழில் ஸ்தானத்தி குரு பார்வையிடுவதால் தொழிலில் இதுவரை இருந்த நெருக்கடி குறையும். தேக நிலை சுபீட்சமடையும். வழக்குகளில் இருந்து விடு தலை பெறுவீர்கள். புதிய வருமானம் வந்து சேரும். சொந்தக்காலில் நிற்பீர்கள்.

பரிகாரம் செய்ய வேண்டிய ராசி என்ப தனால், பித்ருகளுக்குப் பூஜை செய்து, அமா வாசையில் பசுக்களுக்கு பழம் உணவு கொடுப்பதால் நன்மை பெறுவீர்கள். தின மும் சூரிய நமஸ்காரம் செய்வதால் பலன் கிடைக்கும்.

## கன்னி



உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத் தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

புதனின் ஆசி பெற்ற கன்னி ராசிக் காரர்களே உங்கள் ராசிக்கு இதுவரை விரைய ஸ்தானத்தில் இருந்து நான்காம் ஆறாம் எட்டாம் இடங்களைப் பார்வையிட்டு வந்தார். குரு பகவான் இனி ராசியின் ஜென்ம குருவாகவும் ஐந்து ஏழு ஒன்பதாம் இடங்களைப் பார்வையிடுவது மன ரீதி யான பாதிப்பைத் தந்தாலும் குரு பார்க் கும் இடம் மிக நல்ல பலன்களையும் அதிர்ஷ் டங்களையும் தரும்.

உங்கள் ராசி பரிகாரம் செய்ய வேண்டி யது என்பதனால் விநாயகரையும் நவக்கிரக குருவையும் வணங்குவது நன்மைதரும்.

## துலாம்




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

சுக்கிரனின் ஆதிக்கம் பெற்று திறமை யாக செயற்படுபவர்கள் துலா ராசி நண்பர் கள். இதுவரை உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் அமர்ந்து மூன்று ஐந்து ஏழாம் இடங்களைப் பார்வையிட்டு வந்த குரு பகவான் இனி நான்காம் ஆறாம் எட்டாம் இடங்களைப் பார்வையிடுவார். குருவின் பார்வையால் தொழில் சிறப்புறும் லாபம் கிடைக்கும்.

வியாழக்கிழமை தட்சணாமூர்த்திக்கும் நவக்கிரக குருவுக்கும் நெய்விளக்கு ஏற்று வது நன்மையைத் தரும்.

## விருச்சிகம்



விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

செவ்வாய் ஆதிக்கத்தின் ஊக்கம் கொண்டு செயற்படும் விருச்சிக ராசிக்காரர் களுக்கு இதுவரை உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து இரண்டாம், நான்காம் ஆறாம் இடங்களைக் குரு பார்வையிட்டது. உங்கள் வாழ்வில் நன்மை தீமைகளை நேற்று தொழிலில் முன்னேற்ற மின்றி இருந்தீர்கள். பத்தாம் இடத் தில் குரு அமர்வது நல்லதல்ல. ஏழாம் இடத்தைக் குரு பார்வையிடுவதும் லாப ஸ்தானத் தில் அமர்வதும் நல்ல பலன்களை வாரி வழங்கும்.

பரிகாரம் செய்ய வேண்டிய ராசி என்பதனால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவை வணங்கி நெய்விளக்கேற்றுவது சிறப்பைத் தரும்.


## தனுசு



மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

குரு ஆதிக்கத்தில் பிறந்த தனுசு ராசிக் காரர்களே, இதுவரை பாக்கிய ஸ்தானத்தில் அமர்ந்து ராசியையும் மூன்றாம் ஐந்தாம் இடங்களையும்பார்வையிட்டுவந்தகுருவால் உங்கள் முயற்சிகள் வெற்றியளித்தன. இனி குரு பகவான் இரண்டாம், நான்காம் ஆறாம் இடங்களைப் பார்வையிடுவதால் வாழ்க்கையில் மேலும் சிறப்படைவீர்கள்.

(தொடர்ச்சி ... 17 இல்)





## அது ஒரு பொற்காலம்!

# கவியரசர் கண்ணதாசனும், இயக்குநர் ஸ்ரீதரும்...

1962 ஆம் ஆண்டு வெளிவந்து, சிறந்த மாநிலப் படத்திற்கான தேசிய விருதை (வெள்ளிப் பதக்கம்) பெற்ற படம் ஸ்ரீதரின் "நெஞ்சில் ஓர் ஆலயம்". இந்தப் படம் புதுமை இயக்குநர் ஸ்ரீதர் இயக்கத்தில் 22 நாட்களுக்குள் எடுத்து முடிக்கப்பட்டு வெளிவந்த படம். மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றியும் பெற்றது. இந்தப் படத்தில் இடம் பெறும் ஒரு முக்கியமான பாடல் காட்சிக்கான சிட்சுவேஷனை கவியரசர் கண்ணதாசன் அவர்களிடம் டைரக்டர் ஸ்ரீதர் விளக்கமாக கூறிக்கொண்டிருந்தார். கதைப்படி நடிகர் முத்துராமனை தேவிகா



திருமணம் செய்துக் கொள்கிறார். தேவிகா ஏற்கனவே கல்யாணகுமாரை காதலித்து விட்டு சூழ்நிலைக் காரணமாக நோயாளியான முத்துராமனைத் திருமணம் செய்து கொள்கிறார். முத்துராமனுக்கு இந்த விஷயம் தெரியாது. டீரல வுஉைடமநவள ஏற்கனவே நோயாளியான முத்துராமனுக்கு மேலும் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. அவரை ஒரு பிரபலமான மருத்துவமனைக்கு தேவிகா அழைத்துச் செல்கிறார். அங்கு தனது முன்னாள் காதலன் கல்யாணகுமாரே டாக்டராக இருப்பதை அறிகிறாள். அதைப் பார்த்து அதிர்ச்சியடைகிறாள். ஆனாலும் கல்யாணகுமாரிடம் தனது கணவனைக் காப்பாற்றித் தர வேண்டும் என்ற கண்டிஷனுடன் சேர்க்கிறாள். டாக்டரும் காப்பாற்றித் தருவதாக வாக்குறுதி தருகிறார். இதற்கிடையில் முத்துராமன் தனது நோயைப் பற்றி அறிகிறார். டாக்டர் கல்யாணகுமார் தனது மனைவியின் முன்னாள் காதலனாக இருந்தவர் என்பதையும் அறிகிறார். அதிர்ச்சி யடைந்தாலும் தனது மரணத்திற்கு பிறகு இருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். இந்தக் காட்சியை டைரக்டர் ஸ்ரீதர் பாடலுக்கான சிட்சுவேஷனாக கவிஞர் கண்ணதாசனிடம் விவரிக்கிறார். தான் இறந்து விடுவோம் என்று நினைத்த முத்துராமன் தனது மனைவி தேவிகாவிடம், "நான் இறந்து விட்டால் நீ மறுமணம் செய்து கொள்ளவேண்டும்", என்று கூறுகிறார். அதுமட்டுமல்லாமல் டாக்டர் கல்யாண குமாரையும் அழைத்து தனது மரணத்திற்கு பிறகு எனது மனைவியை நீங்கள் திரு மணம் செய்துகொள்ள வேண்டும் என்று கோரிக்கையை வைக்கிறார். பாட லுக்கான சிட்சுவேஷனை டைரக்டர் ஸ்ரீதர் சொல்லி முடித்ததும் கவிஞர் கண்ணதாசன் பேனாவிலிருந்து பாடல் வரிகள் கொட்டின. "சொன்னது நீ தானா? சொல் சொல் சொல் என்னுயிரே... இன்னொரு கைகளிலே யார் யார் யார் நானா? எனை மறந்தாயா? ஏன் ஏன் ஏன் என்னுயிரே? தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை தெருவினிலே விழலாமா? தெருவினிலே விழுந்தாலும் வேறோர் கை தொடலாமா?" இந்த வரிகளைக் கேட்டதும் ஸ்ரீதருக்கு உடம்பு சிலிர்த்து, துக்கம் தொண்டையை அடைக்க, கவிஞரின் கரங்களைப் பற்றி கண்களில் ஒத்திக் கொண்டார். டைரக் டர் கேட்ட பாடல் வரிகளைத் தந்த கவிஞர், இயக்குநர் ஸ்ரீதரிடம் படத்தைப்பற்றி அதிர்ச்சி தரும் வகையில் சில கேள்விகளைக் கேட்டார். "இந்தப் படத்தின் கதை கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் ஒரு கணவன், தான் உயிரோடிருக்கும் போது தன் மனைவியிடம் தான் இறந்தபிறகு அவள் கண்டிப்பாக மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்வானா? இன்னொரு ஆணை அழைத்து நான் இறந்த பிறகு என் மனைவியை நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா? என்று கேட்பானா? இது துளியும் நமது நாட்டின் பண்பாட்டிற்கு ஒத்துவராத விஷயமாயிற்றே... இதனால் படம் அடிப்பட்டுவிடுமோ என்ற பயம் எனக்கு இருக்கிறது," என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். இதைக்கேட்டதும் டைரக்டர் ஸ்ரீதருக்கு பயம் வந்துவிட்டது. ஏற்கனவே இந்தக் கதையைக் கேட்ட சிலர் 'இது ஆன்டிசென்டிமெண்ட் கதை' என்று கூறிவிட்டனர். இந்தக் காட்சி சர்க்சைக் குரியதாகதான் இருக்கும். இந்தக் காட்சி இல்லை என்றால் படத்தில் ஒன்றும் இருக்காது. சாதாரணமாக பத்தோடு ஒன்றாகத்தான் இந்தப் படம் இருக்கும். அதற்காக இந்தக் காட்சியை துணிச்சலுடன் தெரிந்தே டைரக்டர் ஸ்ரீதர் வைத்திருந்தார். ஆனாலும் கவிஞர் பேசிய கருத்துகளுக்கு மறுப்பு எதுவும் சொல்ல முடியவில்லை. 'இந்தப் பிரச்சினைக்கு என்னதான் தீர்வு? கவிஞரே...' என்று டைரக்டர் கேட்டதும் 'அமைதியாய் யோசி... அதுதான் வழி' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். புதுமையான, புரட்சிக்கரமான அந்தக் காட்சியையும் மாற்றக் கூடாது. அதே சமயம் கவிஞர் சுட்டிக் காட்டிய குறையையும் நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்கு என்ன வழி? இரவெல்லாம் தூங்காமல் அமைதியாக யோசிக்கத் தொடங்கினார் ஸ்ரீதர். தான் இறந்து விட்டால் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கண வன் கேட்டதற்காக அழுகிறாள் மனைவி. டாக்டரிடம் தான் இறந்த பிறகு தன் மனைவியை அவர் மணந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கிறான் கணவன். அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அறையை விட்டு வெளியேறுகிறார். இந்த இரு காட்சிகளினால் படத்திற்கு பிரச்சினை வரும் என்றுதானே கவிஞர் சொன்னார். இப்படி தமிழ்நாட்டில் தமிழர்கள் நடந்து கொள்வார்களா? என்பது கேள்வி தமிழ் பாண்பாட்டிற்கு முரணானதாயிற்றே என்பது சந்தேகம். இந்த இடத்தில் டைரக்டர் ஸ்ரீதர் புதியதொரு காட்சியைச் சேர்த்தார். கைகளில் முகம் புதைத்து அழுதுகொண்டிருக்கிறாள் மனைவி. நோயாளி கணவன் மெல்லப் படுக்கையிலிருந்து எழுந்து நகர்ந்து அவளை நெருங்குகிறான். மெதுவாக அவள் கரங்களைப் பற்றி லேசாக அவள் முகத்தைத் தன் விரல்களால் உயர்த்தி கண்ணோடு கண் பார்த்துப் பேசுகிறான். "இதோ பார் நான் என்ன தப்பாகச் சொல்லி விட்டேன்? என்று நீ இப்படி அழுகிறாய் ஒரு தாயும், தகப்பனும் தங்கள் மகள் இளம் வயதில் விதவையாகிப் போனால் அவளுக்கு மறுமணம் செய்துவைக்க வேண்டும் என்று ஆசைப்பட மாட்டார்களா? காரணம் என்ன? தங்கள் மகள் மீது அவர்களுக்குள்ள அன்பும், பாசமும்தான். தங்கை விதவையாகிப் போனால் அவளை மீண்டும் பூவும் பொட்டுமாகப் பார்க்க வேண்டும் என்று அவள் அண்ணன் ஆசைப்படுவதில்லையா? அதற்கு என்ன காரணம் அன்பும் பாசமும்தான். அதே போல் தன் மனைவியை ஆழமாக நேசிக்கின்ற ஒரு கணவனும் ஆசைப்படுவதில் என்ன தப்பு?" கவியரசர் கண்ணதாசன் எழுப்பிய சந்தேகத்திற்குரிய கேள்விக்கு மேற்கண்ட காட்சியில் தனது வசனத்தினாலேயே பதில் கொடுத்தார் டைரக்டர் ஸ்ரீதர். இது கவிஞருக்கு மட்டுமல்ல அவரைப் போலவே சந்தேகப்பட்டு ஆனால் நேரில் டைரக்டரிடம் வெளியிட முடியாமல் இருந்த பலருக்கும் சேர்த்துக் கூறிய பதில்தான் இது. மீண்டும் படம் பார்த்த கவியரசர் கண்ணதாசன் 'நான் கன்வின்ஸ் ஆயிட்டேன்' என்றார். அவர் மட்டும் அந்த காட்சிக்கான கேள்விகளை எழுப்பாமல் இருந்திருந்தால் அந்தப் படத்திற்கான முக்கிய காட்சியை இணைத்திருக்க முடியாது. படத்தையே காப்பாற்றிய அந்த வசனம் எழுதப்பட்டிருக்காது. ஒரு வேளை ரசிகர்கள் சமாதானம் ஆகாமல் படத்தைப் புறக்கணித்திருப்பார்கள். படம் தோல்வியைத் தழுவியிருக்கும். படம் மத்திய அரசின் விருதைப் பெற்றது. ரசிகர் களிடமிருந்து சிறந்த படத்திற்கான பாராட்டுக்களையும் பெற்றுத் தந்தது. வெற்றிப் படத்திற்கான வசூலையும் தந்தது. இப்படியொரு பிரச்சினை இன்றைய கலைஞர்களுக்கு ஏற்பட்டால் காட்சியையும் மாற்றாமல் கருத்தையும் சிதைக்காமல் சீர்செய்து படத்தைக் காப்பாற்றுவார்களா? இது வெறும் சிந்தனையில் மட்டும் வருவது அல்ல. வாழ்க்கை அனுபவத்தில் பெறுவது... இங்கு எத்தனை பேர் வாழ்க்கை அனுபவம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

## பிளாஸ்டிக்கிற்கு எதிரான, 'டபி'

"இயற்கையை, சுற்றுச்சூழலை பாதுகாத்து, பராமரிக்க வேண்டும்..." என்று வலியுறுத்தினால், பெரும்பாலானோரின் காதுகளில் அது விழுவதே இல்லை. இயற்கை வளங்களை அழித்தே தீருவது என, கங்கணம் கட்டி செயல்படுவோர் மத்தியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது ஒரு நாய். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த, சாந்த்ரா கில்மோர் என்ற பெண், 'டபி' என்ற நாயை வளர்த்து வந்தார். இந்நாய், பிளாஸ்டிக் போத்தல்களை எங்கு கண்டாலும், கவ்வி வந்து சாந்த்ராவிடம் கொடுக்கும். 13 வயதாகும் இந்நாய், இதுவரை, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிளாஸ்டிக் போத்தல்களை சேகரித்து, 2011 இல் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தது. இந்த இயற்கை நேசன், சமீபத்தில் இறந்து விட்டது.







## போட்டிச் சிறுகதை 12

பெயர் : பா. தங்கன்
முகவரி : வீரபத்திரர் கோவிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்
சிறுகதை : குற்றவாளிகள் யார்

# குற்றவாளிகள் யார்



அது ஒரு பொலிஸ் நிலையம்.......

அங்கே ஐந்தடி நீளமும் அகலமும் கொண்ட ஓர் சிறிய அறை அந்த அறையிலே பின்பக்கச் சுவருக்கு அண்மையில் உள்ள இடது பக்க மூலையில் ஓர் மலசல கூடம்! அந்த மலசல கூடத்திற்கான மறைப்பாக ஓர் இரண்டடி உயரமான சுவர் கட்டப்பட்டிருந்தது. அந்த மறைப்பு சுவர்ப் பக்கமாக இடது பக்க அறைச் சுவரோடு சேர்த்து இரண்டரை அடி உயரத்தில் திண்ணை போல் ஒரு மேடை சீமெந்தால் அமைக்கப்பட்டிருந்தது.

அந்த சிறிய அறைக்குள் தான் குமரனும் நடுத்தர வயதுடைய இந்திரனும் அடைக்கப்பட்டிருந்தனர். தனி ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுக்க முடியாத அந்த அறைக்குள் அதுவும் கழிப்பறைக்குப் பக்கத்தில் குமரன் என்ற இருபது வயதுடைய இளைஞனும் இந்திரனும் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் இருக்கும் சிறை என்றால் எப்படி இருக்கும் என்பதை இப்போது தான் குமரன் தெரிந்து கொண்டான். அவனோடு சேர்த்து அந்த அறையிலே அடைக்கப்பட்டிருக்கும் இந்திரன் சமூக அக்கறை கொண்ட ஓர் முற்போக்கான மனிதராவார்.

போதை வஸ்தை பாவித்து விட்டு ஓர் இளம் பெண்ணை வன் கொடுமைக்கு உள்ளாக்க முயன்ற ஓர் பெரும் வர்த்தகப் புள்ளி ஒருவரின் மகனை அடித்து நொருக்கி விட்டார். அதற்காக இந்திரன் பொலிஸ் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

"அகிலன் குறூப்" என்ற சண்டியர் குறூப்பைச் சேர்ந்த குமரன் அந்த குறூப்புடன் சேர்ந்து ஒரு வீட்டில் கொள்ளையடிக்க முற்பட்ட போது துணிச்சல் மிக்க அந்த கிராமத்து மக்களால் சுற்றி வளைக்கப்பட்ட போது ஏனைய 14 பேரும் தப்பி ஓடிவிட்டனர். குமரன் மட்டும் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அந்த பொலிஸ் நிலையத்தில் இருக்கும் பழங்காலத்து சுவர் மணிக்கூடு பன்னிரண்டு முறை ஒலித்து ஓய்ந்தது.

எங்கோ தூரத்தில் ஒரு நாய் ஊளையிடும் சத்தம் ஈனஸ்வரத்தில் இடைக்கிடை ஒலித்துக் கொண்டிருந்தது.

இரவு 12 மணியாகியும் குமரனுக்கு தூக்கம் வரவில்லை. அந்த அறையின் இடது பக்க சுவரோடு சேர்த்து திண்ணை போல் அமைக்கப்பட்டிருந்த உயரமான மேடையில் குமரன் படுத்துக்கிடந்தான்.

அவன் மனதில் கோபம் - துயரம், ஆற்றாமை, விரக்தி எனப் பல்வேறுபட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புகள் மாறி மாறி எறிபட்டு அவனை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

வலது கையை பொத்திப் பிடித்து இடது பக்கம் உள்ளங்கையில் பலமாக இடித்து பற்ளை நறநற வென்று கடித்தான். தனது வலது கையால் தனது நெஞ்சில் கோபத்துடன் மூன்று நான்கு தடவை இடித்தான். பின்பு முகட்டை வெறித்துப் பார்த்தபடி நிமிர்ந்து நடந்தான். பின் திடீரென முகம் குப்புறப் படுத்து கிடந்து விம்மி விம்மி அழுதான்.

அவனது பரிதாப நிலையைப் பார்த்தவாறு கீழே படுத்துக் கிடந்த இந்திரன் மெதுவாக எழுந்து அவனது தோளை ஆதரவாகப் பற்றினார். அவரது ஸ்பரிசத்தை உணர்ந்து கொண்ட குமரன் மெதுவாகத் தனது தலையை நிமிர்த்தி இந்திரனைப் பார்த்தான்.

வாழ்க்கையில் குமரன் என்றுமே அனுபவிக்காத ஓர் அன்பான ஸ்பரிசம் அவன் மீது பட்டதாலோ என்னவோ அவனது கண்கள் இரண்டிலுமிருந்து கண்ணீர் ஆறாக ஓடியது.

அவனது கண்ணீரை அன்புடன் துடைத்து விட்ட இந்திரன் "மலையையும் இடித்து தகர்த்தும் மன வலிமை கொண்ட இளைஞன் நீ எதற்காக கோழைகளைப் போல் கண்ணீர் சிந்துகிறாய்" எனக் கேட்டான்.

இவ்வாறு அன்பான ஆறுதல் வார்த்தையை ஒரு போதும் கேட்டறியாத குமரனின் இதயம் இந்திரனின் அன்பான வார்த்தைகளால் உருகி ஓ! என்று அவனை அழ வைத்தது.

குழந்தையை போல் அழும் அந்த இருபது வயது இளைஞனை மார்போடு அணைத்து "அழாதை உன் போன்ற இளைஞர்கள் ஒரு போதும் அழக் கூடாது. சாதிக்க வேண்டிய துடிப்ப மிக்க வயதில் உன் மீது இவ்வளவு துன்பச் சுமையை சுமத்தியது யார்?" என மிகுந்த நேசத்துடன் முன்பின் அறிமுகமில்லாத அந்த இளைஞனை இந்திரன் கேட்டார்...!

"இந்த மாபொரும் துன்பச்சுமையை என் மனதிலே ஏற்றியவர்கள், என்னைப் பெத்த தாய் தந்தையர் தான் அவர்கள் தான் எதிர் காலத்தை அழித்த பாவிகள்"

"என்ன? உன்னை பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்த பெற்ற உன் தாயும், உன்னை வளர்க்கப் படாத பாடுபட்ட உன் தந்தையுமா உன் வாழ்வைக் கெடுத்தார்கள்?" என ஆச்சரியத்துடன் குமரனைப் பார்த்து இந்திரன் கேட்டார்.

"ஆமாம் அவர்கள் தாயாகவும் தந்தையாகவும் இருப்பதற்காக என்னை பெறவில்லை. அவர்களது சுய இன்பத்திற்கான விபச்சார நடவடிக்கையின் விளைவு தான் நான் என் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அவர்கள் என்னை வளர்க்கவில்லை. தங்களது போலியான அந்தஸ்தையும் கௌரவத்தையும் என் மூலமாக உயர்த்தி கொள்ளவே அவர்கள் என்னை வளர்த்தார்கள்."

"சின்ன வயதிலிருந்து எனது உணர்வுகளையும் விருப்பங்களையும் மதியாமல் சிறு பூச்சிகளை நசித்து கொல்வது போல் என் உணர்வுகளை கொன்று விட்டு தங்கள் விருப்பங்களையும் ஆசைகளையும் என் மீது திணித்ததன் விளைவுதான் எனது இந்தத் துன்பச் சுமைக்கும் சிறைபட்ட எனது இன் றைய வாழ்க்கைக்குக் காரணமென" உணர்ச்சி வசப்பட்டவனாய் குமரன் கூறினான்.

இந்திரன் என்ற அந்தச் சமூக உணர்வு கொண்ட மனிதன் நிதானமாகக் குமரனை நிமிர்ந்து பார்த்தார்.

இந்திரனைப் பற்றி எந்த ஒரு கவலையும் இல்லாமல் தனது உள்ளக் குமுறல்களை அவர் முன் அள்ளிக் கொட்டினான் குமரன்.

எனது அப்பா ஒரு வியாபாரி எங்கள் குடும்பத்திற்குப் பணக் கஸ்டமெனப் பெரிதாக இருக்கவில்லை. என்னைப் படிப்பித்து பெரிய (Doctor) டொக்ரராக்கி தன் குடும்ப அந்தஸ்த்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக எனது அம்மா ஒரு ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளை அப்பாவை நச்சரித்து வாங்கிக் கொண்டா.

அப்போது எனக்கு நான்கு வயது.

என்னை ஆரம்பப் பாடசாலையில் சேர்த்து ஒரு கிழமையால் அம்மா என்னை ரியூசனிலும் சேர்த்துக் கொண்டா.

விடிய எழும்பினால் பொழுதுபடும் வரை அம்மாவின் சூட்டியில் நான் ஆரம்ப பாடசாலைக்கும் ரியூசனுக்குமென அலைந்து கொண்டிருந்தேன்.

ஆடவேணும் பாடவேணும் மரத்தில் ஏறிக்குதிக்க வேணும். ஓடிவிளையாட வேணும். அயலில் உள்ள சிறுவர்களுடன் சேரவேணுமென என் சின்ன உள்ளம் துடிக்கும். எனது துடிப்பை நான் அம்மாவுக்கு தெரிவிக்கும் போதெல்லாம் சீ அதுகள் கூடாத பிள்ளைகள். அவர்களோடு சேர்ந்தால் உன் படிப்பு கெட்டுப் போகுமெனக் கூறி என் விருப்பங்களை கொன்று புதைத்து விடுவா.

இப்போத நான் நான்காம் ஆண்டு பாஸ் பண்ணி ஐந்தாம் ஆண்டிற்கு வந்துவிட்டேன்.

ஐந்தாம் ஆண்டில் படிப்பு எனக்கொரு பெரும் சுமையாக மாறியது. பக்கத்து வீட்டு புவிதனை விட நான் கூடிய புள்ளிகளை புலமைப் பரிசில் பரீட்சையில் எடுக்க வேண்டுமென சொல்லிச் சொல்லி அம்மா என்னைச் சித்திர வதைப்படுத்தினா. அந்த ரியூசன் இந்த ரியூசன் எனக் காலை 6 மணியில் இருந்து இரவு 8 மணி வரை அம்மா என்னை சூட்டியில் கொண்டு திரிஞ்சா.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிந்ததும் அப்பாடா என எனக்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது. பரீட்சைப் பெறுபேற்றை பற்றி எனக்கு எந்தவொரு கவலையும் இருக்கவில்லை.

ஒரு நாள் பரீட்சை முடிவுகள் வெளியானது. அதைப்பற்றி எந்த ஒரு கவலையும் இல்லாமல் நான் பாடசாலையில் இருந்து வீட்டிற்கு வந்தேன். வீட்டில் எனது அம்மா கண்கள் சிவக்க தலைவிரி கோலமாய் காட்சி தந்தா.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் எனக்கு 120 புள்ளி. புவிதன் 140 புள்ளி எடுத்துவிட்டான். இதுதான் அம்மாவின் கோபத்திற்குரிய காரணம்.

என்னைக் கண்டதும் அம்மா பத்திர காளி போல் என் மீது பாய்ந்து என்னை அடி அடியெண்டு அடித்தா. நான் கதறக்கதற என்னை தர தர வென இழுத்துக் கொண்டு போய் நாய்க்கூட்டில் நின்ற நாயை வெளியே விட்டு விட்டு என்னை நாய்க் கூட்டிற்குள் தள்ளி நாய்கூட்டின் இரும்பு கேற்றை பூட்டி விட்டுப் போய்விட்டா.

பயத்தால் என் உள்ளம் நடுங்கியது. அழுது அழுது என் கண்கள் வீங்கியது. அம்மா அம்மா என அவலக்குரல் எழுப்பினேன். என் அவலமான நிலமை என் அம்மாவின் இதயத்தை தொடவில்லை. அப்பா வந்து திறந்து விடுவார் என நம்பினேன். அவரும் வந்து கோபத்துடன் என்னை பார்த்தார். உது தான் உனக்கு சரியான தண்டனை என கூறிவிட்டு போய்விட்டார்.

நான் தாங்க முடியாத துயரச் சுமையுடனும் பயத்துடனும் அந்த நாய்க்கூட்டிற்குள் படுத்துக் கிடந்தேன்.

(தொடரும் ...)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 12

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................................

சிறுகதையின் இலக்கம் : ..............................................

எழுதியவர் பெயர் : ..............................................

சிபார்சு செய்பவர் பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

தொலைபேசி இலக்கம் : ..............................

.............................................................. ஆகிய நான்

இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.


..............................

ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# கபாலி பாடல்கள்



## நெருப்புடா நெருங்குடா

**பாடல் : அருண்ராஜ் காமராஜ்**
**பாடியவர் : அருண்ராஜ் காமராஜ்**

நெருப்புடா நெருங்குடா முடியுமா பயமா
ஹாஹாஹாஹா
நெருப்புடா நெருங்குடா பார்ப்போம்

நெருங்கினா பொசுக்குற கூட்டம்!
அடிக்கிற அழிக்கிற எண்ணம்
முடியுமா நடக்குமா இன்னும்
அடக்குனா அடங்குற ஆளா நீ

இழுத்ததும் பிரியிற நூலா நீ
தடையெல்லாம் மதிக்கிற ஆளா நீ

விடியல விரும்பற கபாலீ..கபாலீ..மகிழ்ச்சி
கருணையை மறு கவலைகளை அறு
இதயத்தில் ஒரு இறுக்கம் வரும் பொறு
யாவும் இங்கே மாயம் மாயம்
உன் வீரம்
என்றும்
சீறிப்பாயும்
நம் தேசமெங்கும் ரோசம் ஏறும்
ஒரு வார்த்தை கூட புது
மாற்றம் காணும்
நா வந்துட்டேன்னு சொல்லு. திரும்பி வந்துட்டேன்னு சொல்லு. 25 வருசத்துக்கு முன் கபாலி எப்படிப் போனானோ அப்படியே திரும்பி வந்துட்டான்னுசொல்லு.
கபாலிடா...
விடுதலையடை விடை என்ன நினை
பயத்தையே முறை பகல் கனவை உடை
வீரம் தியாகம் மோதும் மோதும்
உன்தோளில் காயம் மாறும் மாறும்
இனி குரோதம் துரோகம் மாயும் மாயும்
வருங்காலம்
இனியும
இதிகாசமாகும்



**பாடல் : கபிலன்**
**பாடியவர்கள் : ஆனந்த், சந்தோஷ் நாராயணன், கானா பாலா**

வா வா நீ வா தோழா
உலகம் ஒருவனுக்கா
உழைப்பவன் யார்?
விடை தருவான் கபாலி தான்
கலகம் செய்து ஆண்டயரின்
கதை முடிப்பான்

உலகம் ஒருவனுக்கா
உழைப்பவன் யார்?
விடை தருவான் கபாலி தான்
கலகம் செய்து ஆண்டயரின்
கதை முடிப்பான்
நீ நீயாய் வந்தாய் தீயின் கருவாய்
கண்கள் உறங்கினாலும்
கனவுகள் உறங்காதே
பூவின் நிழலாய் புல்லாங்குழலாய்
உனை வெளியிடு துளிர் விடு
பலியாடாய் எண்ணாதே..
விதையாக வாழும் நமக்கு
கதைகள் இருக்கு
நாளை நமக்கே விடியும்
விழித்து போராடு
வானம் உனதே பாதி வழியில்
பறவை பறக்க மறக்காதே
ஏ எண்ணத்தில் நூறு திட்டமிட்டு
கபாலி வாரான் கையாட்டு
பம்பரம் போல சுத்திகிட்டு
பறையிசை அடித்திட்டு பாட்டு கட்டு..
ஏ இத்தனை நாளா கூட்டுக்குள்ள
இனிமே வாரான் நாட்டுக்குள்ள
எதிரி கூட்டம் ஆடி போச்சே
குருதியில் நெருப்பு தான் கூடி போச்சே..
கபாலீலீ..
இதுக்கு பேர் தான் தலைவர் அதிரடி
கபாலீலீ..
நாங்க எங்க பிறந்த
அட உனக்கென்ன போடா தமிழனுக்காக
வந்து நின்னவன் தமிழன்டா
வந்தவன போனவன வாழ வச்சவன்
இனி வாழ்ந்து காட்ட போறேன்
வாய மூடி கவனி
வேரும் பூவும் வேறில்லை
கருமேகம் போல நீரில்லை
அலை கடல் அடங்குமோ
அதிகார குரலுக்கு
எப்போதும் நீரின் வீழ்ச்சி நீதானே
உனை நீந்தி கடக்க முடியாதே
ஒரு பனித்துளி
அது எரிமலை அணைத்திடுமோ..
மேட்டுக்குடியின் கூப்பாடு
இனி நாட்டுக்குள்ள கேக்காது
இன முகவரி அது இனி விழி திறந்திடுமே
மேட்டுக்குடியின் கூப்பாடு
இனி நாட்டுக்குள்ள கேக்காது
இன முகவரி அது இனி விழி திறந்திடுமே
விதையாக வாழும் நமக்கு
கதைகள் இருக்கு
நாளை நமக்கே விதியும்
விழுந்து போராடு
வானம் உனதே
பாதி வழியில்
பறவை பறக்க
மறக்காதே
ஏ எண்ணத்தில்
நூறு திட்டமிட்டு
கபாலி வாரான்
கைதட்டு பம்பரம்
போல சுத்திகிட்டு
பறையிசை அடித் திட்டு
பாட்டு கட்டு.
ஏ இத்தனை நாளா
கூட்டுக்குள்ள
இனிமே வாரான் நாட்டுக் குள்ள
எதிரி கூட்டம் ஆடி போச்சே
குருதியில் நெருப்பு தான் கூடி போச்சே



**பாடல் : உமாதேவி**
**பாடியவர்கள் : கானாபாலா, லாரன்ஸ், பிரதீப் குமார**

வீர சுரந்தரா எமை ஆளும் நிரந்தரா
பூமி அறிந்திந்ரா புது யுகத்தில்
சமர்வீரா
உன் நிலைகண்டு என் உற்றார்க்கு
இரையாகாமல் அடிமைகள் என
அவர் துன்புற்ற துயரங்கள் நீக்கும்
வீர சுரந்தரா
டும் டும் டும் என வெடித்திடும் பகை
களத்தினில் ஆட வெறுத்திடும் குறை
உடைகளை வழங்கிடும்
வழித்துணை
வலிகளில் முளைத்திடும் விடுதலை
பகைவர் ஒளிந்திடும் வீரன் நீ
நிலை பெயர்ந்திடும் உன்சொல்
பெயருமா
உன் நிலை தாண்டி மலை
உயருமா
வழி காட்டும் தலைவனே
இனி அறம் உறங்குமா
வீர துரந்தரா

உரிமை யாழ் மீடினான்
உணர்வால் வாள் தீட்டினான்
உலகில் யாரென காட்டினான்
வீரதுரந்தரா
தடைகள் அகன்றிட
தலைகள் நிமிர்ந்திட
கடையன் படையன்
ஆகினன்



**பாடல் : கபிலன்**
**பாடியவர் : பிரதீப்குமார்**

நதியென நான் ஓடோடி
கடலில் தினம் தேடினேன்
தனிமையின் வலி தீராதோ
மூச்சு காற்று போன பின்பு
நான் வாழ்வதோ தீராத காயம்
மனதில் உன்னாலடி ஆஆறாதடி
வானம் பார்த்தேன் பழகிய
விண்மீன் எங்கோ போக
பாறை நெஞ்சம் கரைகிறதே

ஏனோ இன்று தூரம் போனாள்
இடப்பக்கம் துடித்திடும் இருதய இசையென
இருந்தவள் அவள் எங்கு போனாளோ
இரு விழி இமை சேராமல்
உறங்கிட மடி கேட்கிறேன்
மழையினை கண் காணாமல்
மேகம் பார்த்து பூமி கேட்க
நான் பாடினேன் நீயில்லா நானோ
நிழலை தேடும் நிஜம் ஆனேனடி..
வானம் பார்த்தேன் பழகிய
விண்மீன் எங்கோ போக
பாறை நெஞ்சம் கரைகிறதே
எங்கும் பார்த்தேன் உந்தன் பிம்பம்
கனவிலும் நினைவிலும்
தினம் தினம் வருபவள்
எதிரினில் இனி வர நேராதோ
நதியென நான் ஓடோடி
கடலிலை தினம் தேடினேன்
தனிமையின் வலி தீராதோ
தூண்டில் முள்ளில் மாட்டி
கொண்ட
மீன் நானடி
ஏமாறும் காலம்
இனிமேல்
வேண்டாம்டி
கை சேரடி..
வானம்
பார்த்தேன்
பழகிய
விண் மீன்
எங்கோ
போக
பாறை நெஞ்சம்
கரைகிறதே






ஜெ. யோகராஜ்

# தேடல்பொறி, இணையம், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல்

இந்தவாரம் இணையம், முகப்புத்தகம், Twitter மற்றும் Blog குறித்து சில பயனுள்ள மேலதிக தகவல்களை தரு கிறோம். முதலில் எமக்கு மின்னஞ்சல் ஊடாக கிடைத்த மேலும் சில வாசகர்களின் கேள்விகளும் அதற்கான பதில்களையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

மின்னஞ்சல் முகவரி : KT VISHVA, ktvishva97@gmail.com.

**கேள்வி :**

எனக்கு இரண்டு கேள்விகள் உள்ளன.

1. எனக்கென்று ஒரு இணையத்தளம் உருவாக்குவது எப்படி ?
2. எனது கணனியில் சில கோப்புக்கள் அழிந்துவிட்டன. எவ்வாறு அவற்றை மீளப்பெறுவது ?

தயவு செய்து விளக்கம் தரவும்.

**பதில் :**

உங்களது முதல் கேள்விக்கான பதில் :

சமீபத்தில் என்னிடம் சிலர் yogaraj.hpage.com தளத்தை எப்படி உருவாக்கி னீர்கள்? இதைப் போல நானும் சொந்தத்தில் இணையதளம் வைத்துக் கொள்வது எப்படி என்று கேட்டிருந்தார்கள். அவர்களுக்குப் பதில் தரும் முகமாகவும் தமிழ் வலைப்பதிவு விக்கியை வளப்படுத்துவதற்காகவும் இந்தக் குறிப்பை எழுதுகிறேன். சொந்த வலைப்பதிவு அமைப்பதைப் பற்றி என்றாலும் இது பொதுவில் வலைப் பதிவு கடந்த விஷயங்களையும் தொடுகிறது.

தனக்கென்று இணையதளம் வைத்துக் கொள்வதன் நன்மைகள் எவை?

1. ஒரு தனித்துவ அடையாளம். உங்கள் பெயருடன் ஆளுமையுடன் இணைத்துப் பேச இணையத்தில் ஒருதளம்.
2. உங்களுக்கு வேண்டிய விஷயங்க ளைத் திரட்டும் வசதி பிறருடன் பகிர்ந்து கொள்ளும் விஷயங்களை நேரடியாகப் பிறர், தயவின்றி பரிமாறிக்கொள்ளும் வசதி.
3. நிரந்தர மின்னஞ்சல் முகவரி. மாறும் மின்வெளியில் ஓரளவுக்கு நிரந்தரமான அடையாளத்துடன் மின்னஞ்சல் பெறும் ஃஅனுப்பும் வசதி.
4. இலவசச் சேவைகள் ஒரு நாள் மாயமாக மறைந்து போகும் அபாயம் எப்பொழுதும் உண்டு. நிச்சயமின்மையைக் குறைக்க சொந்தத் தளம் உதவும்.
5. உங்களுக்குத் இணையம் / கணினி சார்ந்த நுட்பங்களில் ஆர்வம் இருந்தால் அவற்றுடன் விளையாடிப் பார்க்க ஒரு வழி.
6. ஒரு பொழுதுபோக்கு

சொந்தத்தில் இணையதளம் வைத்துக் கொள்வது அவ்வளவு சிக்கலான விடயம் கிடையாது.

அ. இணையதளம் பதிவு செய்தல்.

1. முதலில் உங்களுக்குப் விருப்பமான பெயரைத் தெரிந்தெடுங்கள். பலரும் முதலில் தெரிவு செய்யும் விஷயம் அவர்களுடைய சொந்தப் பெயர்தான் (பல பெயர்களின் அடிப் படையிலான தளங்கள் ஏற்கனவே பிறரால் கைகொள்ளப்பட்டிருக்கும்). உதா ரணமாக நான் தெரிந்தெடுத்த பெயர் domesticatedonion (கேட்பவர் முகத்தில் உடனே ஒரு நொடி புன்னகை வர வேண்டும் என்பது என் விருப்பம்). நீங்கள் உங்கள் பெயர், உங்கள் மாமனார் பெயர், நாய்க்குட்டியின் பெயர், பள்ளிப் பருவத் தோழி/தோழன் பெயர், என எது விருப்பமோ அதைக் குறித்துக் கொள்ளுங்கள். எதற்கும் இரண்டு மூன்று பெயர்கள் கைவசம் இருக்கட்டும். (ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் வேறொன்று). பின் அதை எந்த முதன்மை புலத்துடன் இணைக்க விருப்பம் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். .காம், .ஆர்க், .நெட்,... (.com, .org , .net )

எமது உதாரணத்திற்கு coovam.org என்ற இணையதளத்தை வைத்துக் கொள்வோம்.




2. அடுத்ததாக உங்கள் தெரிவு இப் பொழுது உங்களுக்குக் கிடைக்குமா அல் லது வேறுயாராவது இதைப் பதிவு செய்தி ருக்கிறார்களா என்று சோதிக்க வேண்டும். இதைப் பல தளங்களின் மூலம் சோதிக்க முடியும். உதாரணமாக 1and1.com சென்று அங்கிருக்கும் பெட்டியில் உங்கள் தெரிவை உள்ளிட்டால் இது கிடைக்கிறதா என்பது தெரியும். கூவம். நெட் கிடைக்கிறது என்று பதில் வரும். (ஆசைப்பட்டது கெடைக் கலன்னா கெடைக்கறதுக்கு ஆசப்படனுன்னு தமிழ் சினிமா வசனத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்).


3. பல நிறுவனங்கள் வலைத் தளத்தின் பெயரைப் பதிவு செய்கின்றன. இவற்றின் நம்பகத்தன்மை மிகவும் முக்கியம். அதே போல பதிவுசெய்யும் ஒரே சேவைக்கு ஐந்து டாலர் தொடங்கி ஐம்பது டொலர் வரை வசூலிப்பவர்கள் இருக்கிறார்கள். என் னுடைய தேடல் அனுபவத்தில் மேலே சொன்ன 1and1.com ஓரளவுக்கு நல்ல சேவை, குறைந்த கட்டணத்தில் தருகிறது. நான் என்னுடைய தளத்தை வருடத்திற்கு ஆறு டாலர்களுக்குப் பதிவு செய்தேன். பல நிறுவனங்கள் நேரடியான மின் வணிக வசதி மூலம் (கடன் அட்டை) உடனடியாக பதிவு செய்கின்றன.

4. பதிவு நிறுவனத்திற்கு இதைச் செய்து முடிக்க 24 மணிநேரம் ஆகக் கூடும். அதன் பிறகு இந்தத் தளம் உங்கள் பெயரில் பதியப்படும் என்பது நிச்சயமாகும்.

பெயர் கிடைத்துவிட்டது. இனி தளத்தை எப்படி உருவாக்குவது? இதற்குப் பல வழி கள் இருக்கின்றன.

அடுத்த வாரம் அவற்றின் விபரங்களைத் தருகிறேன்.

(தொடரும் ...)




**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com
ஜெ.யோகராஜ் (email : yogaraj35@gmail.com)

# முஸ்லீம் மக்கள்
## யாழ்ப்பாணத்தில் குடியேற்றம்

1704 இல் சில முஸ்லீம் குடும்பத்தினர் இந்தியாவிலுள்ள காயாற்பண்டம் எனும் இடத்திலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள மிரு சுவில், உசன் எனும் இடத்திற்கு வந்து குடியேறினர். பிறகு அவர்கள் நல்லூரில் குடியேறினர். அக்காலகட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முழுமையாக சேத மாக்கப்பட்டது.

இந்துக்கள் முஸ்லீம் மக்களுக்கு எதி ராக நடவடிக்கை எடுத்து அவர்களை அங்கிருந்து துரத்தினர். முடிவில் இந்து சமயத்தவர் வென்றனர். அந்த முஸ்லீம் மக்கள் நாவாந்துறை சென்று அங்கு குடியேறினர்.

1720 இல் நல்லூர் கந்தன் கோவில் இந்து மக்களால் மீளவும் கட்டப்பட்டது. 1731 ஆம் ஆண்டு திருவாளர் ட்ரூம் ஒரு கவர்னராக இருந்தார். அவர் ஒரு நல்லவர் அவரது ஆட்சியை யாழ்ப்பாணத்திலுள்ள சகல மக்களும் வரவேற்றனர்.

முஸ்லீம் மக்கள் நல்லூரிலிருந்து நாவாந்துறைக்கு அதே கவர்னரால் தான் கட்டளை இடப்பட்டது. இல்லாவிட்டால் அங்கே கலவரம் ஏற்பட்டிருக்கும்.

# நோர்வூட்டில் கூரைத்தகடுகள் வழங்கும் நிகழ்வு

(க.கிஷாந்தன்)

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட் கட்டமைப்பு வசதி மற்றும் சமுதாய அபி விருத்தி அமைச்சின் 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 28 தோட்டங் களைச் சேர்ந்த 472 தொழிலாளர் குடும் பங்களுக்கு கூரைத்தகடுகள் 30.07.2016 அன்று மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் நோர்வூட் விளையாட்டு மைதானத்தில் வழங்கி வைக்கப்பட்டன. 10,039 கூரைத் தகடுகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் அமைச்சர் உட்பட அமைச்சின் செயலாளர் ரஞ்சனி நடராஜ பிள்ளை, மத்திய மாகாண சபை உறுப்பினர் களான சோ.ஸ்ரீதரன், சிங் பொன்னையா, சரஸ்வதி சிவகுரு, மலையக மக்கள் முன் னணியின் செயலாளர் ஏ.லோறன்ஸ், மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் வீ.புத்திரசிகாமணி மற்றும் தோட்ட அதி காரிகள், தோட்ட தொழிலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

# குரு பெயர்ச்சி

உங்கள் ராசிக்கு குரு கெடுதல் செய்ய மாட்டார். உங்கள் ராசி பரிகாரத்துக்குட்பட்ட தென்பதால் அடிக்கடி குருவை வணங்க வேண்டும்.

**மகரம்**



உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங் கள்.

சனி பகவானின் ஆதிக் கத்திலும் தனித்திறமை கொண்டு விளங் கும் மகர ராசி அன்பர்களே இதுவரை உங்கள் ராசிக்கு இரண்டு, நான்கு, பன்னிரண்டாம் இடங்களைப் பார்த்து வந்த குரு இனிமேல் உங்களின் ராசியையும் மூன்றாம் ஐந்தாம் இடங்களையும் பார்வை யிடுவது உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். குரு உங்கள் ராசிக்கு பாவியாக இருந்தாலும் பாவி மறைந்தாலும் பலன் தருவார். இருந்தாலும் பலன் தருவார். குரு நீசம் பெற்று பலம் இழப்பதால் அதிக பாதிப்பு இருக்காது. உங்கள் ராசிக்கு குரு அனுக்கிரகம் இருப்பதால் பரிகாரம் தேவை இல்லை. என்றாலும் குருவை வணங்குவதால் சிறப்பு உண்டாகும்.

**கும்பம்**

அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்

சனி பகவானின் ஆதிக்கம் பெற்று பிறருக்கு உதவி செய்யும் மனம் கொண்ட கும்ப ராசி நண்பர்களே! இது வரை




உங்கள் ராசிக்கு ஏழாம் இடத்தில் அமர்ந்து உங் கள் ராசியைப் பார்த்து மூன்றாம் இடத்தையும் லாபஸ் தானத் தையும் பார்த்த குரு இனி உங்களின் ராசிக்கு விரய ஸ்தானத்தையும் நான்காம் இடத்தையும் பார்வையிடுவது உங்களின் வாழ்க்கை யில் பல மாற்றங்களைத் தந்து சிறப்பான வளர்ச்சியைத் தருவார். உங்கள் ராசி பரிகாரத்துக்குரியது என்பதால் வியாழக் கிழமை விநாயகரையும் நவக்கிரக குருவை யும் வணங்குவது நன்று.

**மீனம்**

பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி.

குரு பகவானின் ஆதிக்கத்தில் பிறந்த மீனராசி நண்பர்களே இதுவரை உங்க ளின் ராசிக்கு ஆறாமிடத்தில் அமர்ந்து தொழில் ஸ்தானத்தையும் பன்னிரண்டாம் இடத்தையும்இரண்டாமிடத்தையும்பார்வை செய்த குரு இனிமேல் உங்களின் ராசியைப் பார்ப்பதுடன் ராசிக்கு ஏழாம் இடத்தில் அமர்ந்து லாப ஸ்தானத்தையும் மூன்றாம் இடத்தையும் பார்ப்பதால் உங்களுடைய பல கனவுகள் நிறைவேறும்.

நவக்கிரக குருவை வியாழக் கிழமைகளில் வணங்கி வர எல்லாம் சுபமாக நடைபெறும்.



## அத்தியாயம் 13

# சந்தர்ப்பவாதிகள்

**ஏ.ஜே.ஞானேந்திரன்**

நாம் எல்லோருமே ஒருவகையில் சந்தர்ப்பவாதிகள்தான். நமக்குச் சாதகமான சூழ்நிலை என்று தெரிந்து விட்டால், பட்டென அந்த நிலைக்கு ஏற்றவாறு நம்மை மாற்றிக் கொண்டு விடுகின்றோம். சுயநலத்தை மீறி ஒருபோதுமே பிறநலம் வருவதில்லை. தன்னை மிஞ்சித்தான் தானமும் தருமமும் என்பதுபோல, சந்தர்ப்பங்ளைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் வரும் போது, முதலில் நம்மைப் பற்றிய சிந்தனை தான் நமக்கு வருகின்றது. அதை அடுத்தே அடுத்தவர் பயன்பற்றிய சிந்தனை வருகின்றது...

தன் நண்பன் மணியத்திடமிருந்து புதிதாக ஒரு தகவலை அறிந்தபோது, அவசரம் அவசரமாக இதை மகனுக்கு அறிவிக்க வேண்டும். இந்தக் கல்யாணம் சரிவராது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். முடிந்தால் உமா வீட்டுக்கு ஒரு தடவை போய் வரவேண்டும் என்றெல்லாம் சித்திர வேல் நினைத்த போது, அவர் ஒரு அசல் சந்தர்ப்பவாதியாக மாறியிருந்தார். தன் குடும்ப நல அக்கறைதான் அங்கே தலை தூக்கி நின்றது. முதலில் உமா வீட்டுப் பக்கம் போகப் பின்வாங்கியவர், இப்பொழுது அங்கே அவசரம் போய்வர வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்.

மறுமுனையில் "ஹலோ" என்று சொல்லியபடி சத்யன் போனை எடுத்தபோது, சித்திரவேலுக்கு பெரிய மன நிம்மதியாக இருந்தது. சுடச் சுட காதில் விழுந்த கதையைச் சொல்லிவிட வேண்டுமென்ற அவசரம் அவருக்கு!

சம்பிரதாய சுகவிசாரிப்புகளின் முடிவில், நிவேதாவின் சினேகிதன் விவகாரத்தை மளமளவென்று சொல்லி முடித்தார் சித்திரவேல்.

"தம்பி சத்யன் இந்தச் சம்பந்தம் நமக்குச் சரிவாராது போல கிடக்கு. நீ பெட்டேட்டச் சொல்லிப்போடு"

" அப்பா இந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியும் "

"என்னடா சொல்லுறே? உனக்குத் தெரியுமா? ஆர் உனக்குச் சொன்னது ? "

"நிவேதாதான். அவளே தன்ர பழைய சினேகிதத்தைச் சொல்லி, உங்களுக்கு விருப்பமெண்டா, என்னை ஏற்கலாம். கல்யாணம் நடந்த பிறகு மூண்டாம் ஆள் சொல்லி அது உங்களுக்கு தெரிய வர்றதை நான் விரும்பேல்ல எண்டு சொன்னவள், இது நாலு வருஷத்திற்கு முந்திய ஆறு மாசத்து பைத்தியக்கார சினேகிதம் எண்டும் சொன்னாள்"

"அப்ப இந்தச் சினேகிதத்தால உனக்கு ஒரு பிரச்சினையும் இல்லையே தம்பி?"

"அப்பா வெளிநாடுகளில இந்தச் சினேகிதங்கள் புதினமில்லை. இதை ஒளிச்சு மறைக்காம ஒரு பெரிய விஷயமாக எடுத்து, நிவேதா என்னட்டச் சொன்னது எனக்குப் பிடிச்சிருக்கு அப்பா. இந்த நிவேதாவை முன்பின் பார்க்காம நான் விரும்பினதே இதுக்காகத்தான் அப்பா..."

தன் மகனை நினைத்து பெருமைப்பட்ட சித்திரவேல், அதே கணம் தன்னை நினைத்து வெட்கப்பட்டார். தான் சந்தர்ப்பவாதி மட்டுமல்ல சுயநலவாதி என்றும் அவர் நினைத்து வெட்கப்பட்டார். மகனது கனடிய சினேகிதி விவகாரம் சரிவராது என்று ஒரேயடியாக முடிவெடுத்துவிட்டு, பட்டென உமா வீட்டுக்குப் போக, தான் முடிவெடுத்ததை நினைத்து அவருக்கு வெட்கமாக இருந்தது. வயது முதிர்ச்சி இருந்தும் தனக்கு மனமுதிர்ச்சி இல்லையே என்று அவர் வெட்கப்பட்டார். தன்னை விட தன் மகன் எவ்வளவு உயர்ந்து நிற்கிறான் என்ற பெருமிதத்தோடு, அவர் வீட்டு வேலையாட்கள் நிற்கும் பக்கம் நடக்கலானார். எந்தநிறத்தையென்றாலும்அடித்துச் தொலை என்று ஒரு வேலையாளுடன் சினந்தது ஞாபகத்திற்கு வந்தது.

அப்பொழுது இலேசாக மழைத் தூறல் தொடங்கியிருந்தது.

அட புதுப் பெயின்ட் கரைந்து விடுமே... அவரமாக மதில் பக்கம் நோக்கி விரைந்தார்.........

............

கார்த்திக்கு இன்று உடம்பு நன்றாக இல்லை. முதல் நாள் குடித்த பியர் காரணமோ தெரியவில்லை. கட்டிலில் இருந்து எழும்ப மனமில்லாமல் முகட்டைப் பார்த்தபடி கிடந்தார் கார்த்தி.

என்ன தரித்திர வாழ்க்கை இது... மனைவி இருந்தும் இல்லாதது போல, பிள்ளைகள் இருந்தும் இல்லாதது போல தனியனாக இந்த வாழ்க்கையை எப்படி ரசிக்க முடியும்?

மனைவியை விவாகரத்துச் செய்தாயிற்று. திரும்பவும் இன்னொருத்தியைக் கட்டும் நோக்கம் அவருக்கு இல்லை. சித்திராவுடனான இல்வாழ்க்கை கொடுத்த மனக் கசப்பு, மனமுறிவு, தொடர்ந்த மணமுறிவு, கல்யாண வாழ்வின் மீது ஒரு பெரு வெறுப்பை அவருள் ஏற்படுத்தி இருந்தது.

அவர் நோயாளியாகி விட்டதும் குடும்ப வாழ்வை வெறுப்பதற்கு இன்னொரு காரணம். உடம்பில் நோய், கைவசம் ஒரு தொழில் இல்லை. அரசிடமிருந்து பிச்சைக் காசு... இந்தக் கோலத்தில் இன்னொரு கல்யாணமா?

வேண்டவே வேண்டாம் என்று மனதுள் வைராக்கியமாக இருந்தார் கார்த்தி.


மெல்ல எழும்பி காலைக் கடன்களை முடித்துவிட்டு, சோபாவில் உட்கார்ந்து தேநீரைப் பருகலானார்.

இணைய மேய்ச்சலில் அலாதிப் பிரியம் அவருக்கு இருக்கின்றது. புத்தகப் பக்கங்களைப் பிரித்து வாசிக்கும் பழக்கம் அவரைக் கைவிட்டுப் போயிருக்கின்றது. அந்த இடத்தில், மணிக்கணக்காக இணைய வாசிப்புப் பழக்கம் வந்து சேர்ந்திருக்கின்றது.

ஒரு மின்னியல் புத்தகத்தை வாசிப்பதற்கும், அச்சிட்ட ஒரு நூலை வாசிப்பதற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் பற்றி அண்மையில் ஒரு சுவையான பட்டிமன்றம் இடம்பெற்றிருந்தது. அதில் கார்த்தியும் பங்கு பற்றியிருந்தார். மின்னியல் நூல்கள் சார்பாகத்தான் இவர் பேசவேண்டும்.

நிறைய வாசிப்பதால் கார்த்தியிடம் சாதுர்யமாகப் பேசுந் திறன் இருந்தது. தன் அணிக்குச் சார்பாக பல கருத்துக்களை அன்று அள்ளிக் கொட்டியிருந்தார்.

அன்றைய இணையப்பதிப்பைவாசிக்கத் தொடங்கினார் கார்த்தி. புங்குடுதீவு கல்லூரி மாணவியைக் கற்பழித்து கொலைசெய்த விவகாரம், யாழ்ப்பாண மண்ணில் பூதகரமாக வெடித்திருக்கும் செய்தியை வாசித்தார். சுவிஸ் நாட்டில் இருக்கும் ஒரு தமிழரும் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் தகவலையும் வாசித்தார். உழைக்கும் பணத்தைச் செலவழிக்க பல நல்ல வழிகள் இருந்தும், குறிப்பிட்ட சிலர் தமது பணத்தைக் கொண்டு எப்படி எப்படியான அக்கிரமங்களைச் செய்து வருகின்றார்கள் என்று அறிய வந்தபோது அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. இன்னொரு இடத்தில் தலை வெட்ட ஆட்கள் தேவை என்று செய்தி வெளிவந்திருந்தது.



சவுதி அரேபியாதான் தலை வெட்டிகளைத் தேடுகிறார்கள் என்று செய்தியை முழுவதுமாக வாசித்தபோது தெரியவந்தது.

(தொடரும்....)

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## துட்டகாமினி...

கொலை செய்வது பௌத்த மத பாதுகாப்பிற்கும் நல்லொழுக்கம் நிறைந்த சீரிய வழிமுறை என்று மகாவம்சம் அறிவிக்கின்றது.

சிங்கள இளவரசனான துட்டகாமினி (கி.மு 161-137), தமிழ் மன்னனான எல்லாளன் (கி.மு 205-161) ஆகியோருக்கிடையில் நடந்த யுத்தம் பௌத்த மக்களை பாதுகாக்க மேற்கொண்ட யுத்தம் என மகாவம்சம் பகிரங்கமாக அறிவிக்கின்றது.

இருந்த போதிலும் துட்டகாமினியின் வெற்றி, தந்திரமும் கபடமும் நிறைந்தது. யுத்த விதி முறைக்கு மாறானதாக கொள்ள வேண்டும்.

தினச்செய்தியின் ஆய்வின் படி அனுராத புரத்தின் அரண்மனையின் கிழக்கு வாசலில் துட்டகாமினி தனது வாகனமாக கந்துள்ள என்ற யானையின் மீது ஏறியிருந்து, மன்னன் எல்லாளன் அவன் தனது வாகனமாக மகாபட்ட என்ற யானையில் ஏறியிருந்தும் நடந்த யுத்தம் உச்சகட்டமான நிலையை அடைந்தது.

நேர்மையானவனும் நீதிக்கு மதிப்பளிக்கும் நற்குணம் நிறைந்த மன்னனான எல்லாளனை துட்டகாமினி யுத்த வழிமுறைகளை பின்பற்றாமல் அவ னது தந்திரமான ஏமாற்றுத்தனமான போர் வழி முறைகளை பின்பற்றி எல்லாளனை வெற்றி பெற்றான் என்று தான் தெரிய வருகிறது.

யுத்தவரைபுகளின் மிக முக்கிய அம்சம் யுத்தம் புரியும் ஒருவர் அவர் ஏறிவந்த வாகனத்தில் இருந்து கீழே விழுந்தால் அவர் மீண்டும் யுத்தத்திற்கு தயாராகும் வரை எந்த விதமான தீங்கும் அவருக்கு விளைவிக்கக் கூடாது.

அது மாத்திரமின்றி அடுத்த விதிமுறை என்னவென்றால் ஒருவர் யுத்த களத்தில் யுத்த ஆயுதங்கள் சகலதையும் இழந்து நிராயுத பாணியாகிவிட்டால் அவர் மீண்டும் யுத்தம் புரிவதற்கு ஆயத்தமாகும் வரை அவருக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க கூடாது - இராவணனை பார்த்து இராமன் கூறியது - இன்று போய் நாளை வா

துட்டகாமினி மன்னன் எல்லாளனுக்கு இடையில் நடந்த யுத்தத்தின் போது துட்டகாமினி தனது யானையான கந்துளவில் இருந்து ஒரு முறை அல்ல இரு முறை கீழே விழுந்தான். ஆனால் அவனுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த மன்னன் எல்லாளன் இரு முறையும் அவன் எழுந்து யானையில் ஏறி யுத்தத்திற்கு தயாராகும் வரை எந்தத் தீங்கும் விளைவிக்காது யுத்த மரபினைக் கடைப்பிடித்துக் காத்திருந்தான்.

தொடர்ந்து யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது எல்லாள மன்னனின் யானையான மகாகம்பட்ட தடுமாறி கீழே விழுந்தது. அப்பொழுது மன்னன் எல்லாளனும் தடுமாறி கீழே விழுந்தான். அவ்வாறு மன்னன் கீழே விழுந்ததைப் பயன்படுத்தி, துட்டகாமினி தனது ஈட்டியால் எல்லாள மன்னனைத் தாக்க ஆரம்பித்தான். அவ்வாறு தாக்கப்படும் பொழுது "யுத்த மரபுகளை நீ மீறுகிறாய்" என எல்லாள மன்னன் எடுத்துக் கூறியும் அவன் அதைத் காதில் போட்டுக் கொள்ளாமல் ஈட்டியால் குத்திக் காயப்படுத்தி இறுதியில் கொன்றான்.

அவ்வாறு இறந்த மன்னனின் உடலை அவனது வாகனமான மகாகம்பட்ட சிறு தூரம் இழுத்துக் கொண்டு சென்று பின்னர் தானும் விழுந்து இறந்தது.

மகாவம்சம் இதைத்தான் துட்டகாமினி மன்னன் எல்லாள மன்னனுடன் செய்த யத்தத்தை கொலை செய்வது ஒரு புனிதமான காரியம் என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் விகார தேவியை (விகார மகா தேவியை) விபரித்து தவறான தகவல்களை கூறியுள்ளார்கள். விகார தேவி களனியாவைச் சேர்ந்த மிகவும் அழகான பெண்மணி. அவளே துட்டகாமினியின் தாயாருமாவார்.

சிங்கள வரலாற்று நூல் ஆசிரியர்கள் துட்டகாமினி தமிழ் இராணுவ வீரரான ரிற்றம்பாவுக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் அவருக்கு முன் விகார தேவியை முன் நிறுத்தி அவரை ரகசியமாக விகாரதேவியை சந்திக்க சம்மதித்ததையும் நடைபெற்ற சந்திப்பை அடுத்து துட்டகாமினியின் வீரர்கள் ரிற்றம்பாவை கொலை செய்தார்கள் என்றும் அதையடுத்து துட்டகாமினி தன் படையுடன் அனுராதபுரம் சென்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

துட்டகாமினி எல்லாளனுடன் போர் தொடுக்கதனதுபடையுடன்புறப்பட்டபொழுது 20 மன்னர்களை தாக்கி கோட்டைகளை கைப்பற்றி அனுராதபுரத்தை வந்தடைந்தார் என்று குறிப்பிடுகிறார்கள்.

துட்டகாமினி மிகிந்தலைக்கு அடுத்துள்ள அம்பாதித்தக்க கோட்டையை நெருங்கும் பொழுது அந்தக் கோட்டையின் முக்கிய தளபதி ரித்தம்பா கடுமையாக எதிர்த்துப் போராடினார்.

ரித்தம்பா துட்டகாமினிக்கு இடையில் 4 மாத காலம் யுத்தம் நீண்டு கொண்டே போயிற்று. இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர துட்டகாமினி தனது அழகிய தாயாரை ரித்தம்பாவுக்கு மணம் முடித்து வைத்து சமாதானம் ஏற்படுத்திக் கொண்டு அவனது படைகளுடன் அனுராதபுரம் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்து சென்றான்.

இந்த உண்மையை சிங்கள வரலாற்றாளர்கள் வேண்டும் என்றே மாற்றி எழுதியுள்ளார்கள். ஒரு காலத்தில் விகாரமகாதேவி சில காலம் தமிழ் மன்னனின் மனைவியாக இருந்தார் என்பதுதான் உண்மை.

# விளையாட்டு

ஊக்க மருந்து பயன்படுத்தியதாக, மேலும் 19 ரஷ்ய தடகள வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ரஷ்யாவை சேர்ந்த 108 தடகள வீரர்கள் இதுவரை தடைக்கு உள்ளாகியுள்ளனர். இது வீரர்கள் உள்ளாகியுள்ளனர். இது வீரர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது அவமானப்படுத்தும் செயல் என்று கூறியுள்ளார் ரஷ்ய ரோவிங் கூட்டமைப்பு தலைவர் வெனியமின். நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். இருப்பினும் போராட்டத்தை நாங்கள் நிறுத்த மாட்டோம். ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டி சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியுடன் இது சம்பந்தமாக ஆலோசனை நடத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

Rio2016


## ரஷ்ய தடகள வீரர்கள் ஒலிம்பிக்கில் பங்கேற்க தடை



மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய தடகள வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு அந்நாட்டு அரசும், தடகள சங்கமும் உடந்தையாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து ரஷ்ய தடகள அணியின் பல வீரர்களை, ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க சர்வதேச தடகள கூட்டமைப்பு தடை விதித்துள்ளது. இந்நிலையில், மேலும் 19 ரஷ்ய தடகள வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ரஷ்யாவை சேர்ந்த 108 தடகள வீரர்கள் இதுவரை தடைக்கு

## ரொஜர் ஃபெடரர் விலகல்



ரியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து உலகின் முன்னணி டென்னிஸ் வீரரான ஸ்விட்சர்லாந்தின் ரொஜர் ஃபெடரர் விலகியுள்ளார். முழங்கால் பிரச்சினை காரணமாக அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். ஒலிம்பிக்கில் இருந்து மட்டுமின்றி இந்த சீசனில் இருந்தும் முழுமையாக விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது முகநூல் பக்கத்தில் கூறியிருப்பதாவது : எனது தாய்நாட்டுக்காக ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாதது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. இந்த சீசன் முழுவதிலும் நான் விளையாடமாட்டேன். எனது மருத்துவர், எனது அணியினர் என அனைவரிடமும் ஆராய்ந்த பிறகே இந்த கடினமான முடிவை எடுத்தேன். இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட முழங்கால் காயத்துக்காக அதிக அளவில் ஓய்வு தேவைப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.



## பாகிஸ்தானின் கோடீஸ்வர கிரிக்கெட் வீரர்

பாகிஸ்தானிலேயே மிகப் பெரிய கோடீஸ்வர கிரிக்கெட் வீரர் யார் தெரியுமா.. முகம்மது ஹபீஸ்தான். இவருடைய கடந்த ஆண்டு வருமானம் எவ்வளவு தெரியுமா.. ரூ. 2.49 கோடியாம். பாகிஸ்தான் அணியின் மூத்த வீரர் ஹபீஸ். இவருக்கு கடந்த 2015-16 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சம்பளமாக கொடுத்த தொகை ரூ. 2.49 கோடியாம். இவருக்கு அடுத்து அதிக அளவில் சம்பளம் வாங்கும் வீரர்கள் அசார் அலி, யூனிஸ் கான், முஸ்பா உல் ஹக் ஆவர். இது சம்பளம் மட்டும் இல்லை. இதர போனஸ் உள்ளிட்டவற்றையும் சேர்த்துத்தான் இந்தத் தொகை. பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திடமிருந்து கடந்த ஆண்டு 46 வீரர்கள் சம்பளம் வாங்கியுள்ளனர். இவர்களுக்காக 550 மில்லியன் ரூபாய் அளவுக்கு சம்பளம் கொடுத்துள்ளது. இதில் மூத்த வீரர் ஹபீஸ் சம்பளம், போனஸாக ரூ. 2.49 கோடியைப் பெற்றுள்ளார். இவர்தான் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களியே அதிக வருவாய் ஈட்டும் வீரர்.

ஆல் ரவுண்டர் ஷாஹித் அப்ரிடி கடந்த ஆண்டு சம்பாதித்த தொகை வெறும் ரூ. 1.8 கோடி மட்டுமே. இவர் தற்போது டி 20 போட்டிகளில் மட்டுமே ஆடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

யூனிஸ்கான், மிஸ்பா உல் ஹக் தலா ரூ. 2.4 கோடி சம்பளமாக வாங்கியுள்ளனர். உமர் அக்மல் 1.8 கோடி, முகம்மது இர்பான் 1.5 கோடி சம்பாதித்துள்ளனர்.

கடந்த 2 வருடங்களாகத்தான் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை நல்ல சம்பளம் கொடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. முன்பு போல வெளிநாட்டு அணிகள் பாகிஸ்தானுக்கு செல்வதில்லை என்பதாலும் பாகிஸ்தான் அணி இந்தியாவுடன் மோதுவதில்லை என்பதாலும் வருமானம் இல்லை என்பது முக்கியமானது.

## ஒரு வேளை சாப்பாட்டுக்காக உலகச் சம்பியன் ஆன உசேன் போல்ட்!

குட்டி உசேனுக்கு ஓட மட்டும்தான் தெரியும். எங்கே சென்றாலும் ஓட்டமும் சாட்டமும் தான். ஒருநாள் பள்ளிக்கு புறப்படுகிறான் உசேன். லஞ்ச் பேக்கை மறந்து விடுகிறான். வழி நெடுகிலும் ஓட்டம்தான். உசேனை விரட்டிய நாய் தோற்றுப்போய் விடுகிறது. போகிற போக்கில் கால்பந்து களத்திற்குள் புகுந்து, மின்னல் வேக 'கிக்' விடுகிறான் உசேன்.

மீண்டும் பள்ளியை நோக்கி ஓட்டம். பள்ளிக்கருகில், விளையாட்டு பயிற்சியாளர் ஒருவர் மீது மோதி விட்டு நொடியில் மறைந்து விடுகிறான். உசேனின் வேகத்தை பார்த்து 'வாவ்" என மிரண்டு போகிறார் அவர். கோச் மனதுக்குள் ஏதோ பொறி தட்டுகிறது.

மதிய வேளை. லஞ்சுக்கு பெல் அடித்தாகி விட்டது. உசேன் பையை பார்க்கிறான். லஞ்ச் பேக் இல்லை. மற்ற குழந்தைகள் சாப்பிட, உசேனுக்கு பசி காதை அடைக்கிறது. காலையில் அவனை பார்த்த கோச், உணவு பேக்குடன் சாப்பிட வருகிறார். உணவு பேக்கைத் திறக்கிறார். உசேன் மூக்கை வாசம் துளைக்கிறது. ஆனாலும் என்ன செய்ய... பரிதாபமாக ஒரு மூலையில் போய் உட்காருகிறான்.

காலையில் இருந்தே அந்த கோச், உசேனின் நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறார். உசேன் சோர்வுடன் அமர்ந்திருப்பது தெரிகிறது. உசேனிடம் போகிறார் . 'என்ன உசேன் சாப்பாடு கொண்டு வரவில்லையா..." எனக் கேட்கிறார். உசேன் பரிதாபமாக முழிக்கிறான். அப்போது அருகில் நிற்கும் ஓட்டப்பந்தய வீரரைக் காட்டி, 'சரி... அந்த ஓட்டப்பந்தய வீரரை நீ முந்தி விட்டால், உனக்கு எனது உணவைத் தருகிறேன்" என்கிறார். உசேன் ஒப்புக் கொண்டு அந்த வீரனுடன் ஓடத் தொடங்குகிறான்.

முதலில் உசேனால் முடியவில்லை. திரும்பிப் பார்க்கிறான். அப்போதும் கோச் உணவைக் காட்ட, உற்சாகமாகி உசேன் மீண்டும் ஓடுகிறான். இந்த முறை அவனால் ஜெயிக்க முடிகிறது . கோச், உணவுத் தட்டை அவனை நோக்கி நீட்டுகிறார். இந்தமுறை அவனிடம் ஒரு கேள்வியை கேட்கிறார். 'உசேன் நீ ஒரு ஜாம்பவானாக உருவெடுக்க வேண்டுமா அல்லது இந்த உணவுத் தட்டுடன் அடங்கி விடுகிறாயா" என்கிறார்.

குட்டி உசேனுக்கு அவரது கேள்வி உறுத்துகிறது. உணவைத் திருப்பி கொடுத்து விடுகிறான். மீண்டும் ஓடத் தொடங்குகிறான். ஓடிக்கொண்டேயிருக்கிறான்.

ஒலிம்பிக் சம்பியன் உசேன் போல்ட்டின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருக்கும், 'The boy who learned to fly" என்று குறும் படத்தின் கதை இது. இந்த அனிமேஷன் குறும் படம் நிச்சயம் பல குழந்தைகளை கவரும்.



தினச்செய்தி
என்றும் உங்களுடன்



முள்ளியவளையில் உள்ள காட்டா விநாயகர் ஆலயம் புதுப்பொலிவு பெறுகிறது. இங்கு பல புதிய வேலைத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. காட்டா விநாயகர் என்றவுடன் எங்களுக்கு மனதில் நிழலாடுவது கடல் நீரில் எரியும் சுடர் விளக்கும், வற்றாப்பளை கண்ணகி அம்மன் விசாகப் பொங்கலும் தான்.

காட்டாவிநாயகர் கோவிலின் நிர்வாக சபையினர் அண்மையில் ரூபா 18 லட்சம் செலவில் அறநெறிப் பாடசாலை ஒன்றை நிர்மாணித்துள்ளனர். இந்த அறநெறிப்பாடசாலை மண்டபம் 52 அடி நீளமும், 22 அடி அகலமும் கொண்டதாகும்.



# புதுப்பொலிவு பெறும் முள்ளியவளை காட்டா விநாயகர் கோவில்



இந்த மண்டபத்திற்கு அடுத்த காணியிலே முள்ளியவளை தமிழ்க் கலவன் பாடசாலை இருக்கின்றது. இந்த அறநெறி மண்டபத்தில் பாடசாலைக்குத் தேவையான காரியாலயமும், படிக்கவரும் பிள்ளைகளுக்கான கழிப்பறையும் கட்டப்பட்டுள்ளன.

காட்டாவிநாயகர் ஆலயத் திருப்பணி சபைத் தலைவராக த.பரஞ்சோதியும் உபதலைவராக எஸ். கனகரத்தினமும் உள்ளார்கள். செயலாளராக ஜே. சயந்தனும், பொருளாளராக திருக்குமாரும் உள்ளனர். காட்டா விநாயகர் ஆலயத்தின் திருப்பணி வேலைகளைப் பற்றி தினச்செய்திக்கு உபதலைவர் எஸ். கனகரத்தினம் கருத்து தெரிவித்தார்.



ஆலயத்தைச் சுற்றிலும் தூண்கள் நாட்டப்பட்டு இரும்புக் கம்பி வேலிகள் போடப்படுகின்றன என்று கூறினார். மொத்தமாக 42 இரும்பு கம்பித் தூண்கள் போடப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூண்களுக்கும் இடையில் 8 அடி அகலம் கொண்டதாகும். தேவையான நேரம் இந்த இரும்பு வேலிகளை கழட்டி திருவிழாக்காலங்களில் சுவாமி ஊர்வலம் வருவதற்கு வசதியாக அமைக்கப்படுகின்றன.

இந்த அறநெறிப் பாடசாலையின் முன்பு ஆலயத்தில் நம்பிக்கை கொண்ட வசந்தன் குடும்பம் பொங்கல் மண்டபத்தை நிர்மாணித்து வருகிறது.

தீர்த்தக் குடம் அடங்கிய நடை பவனி பெரும் தெருக்கள் வழியாக அம்மன் சந்நிதியை அடைந்து புதரிகுடா ஊடாக முல்லைத்தீவு பிரதான வீதியூடாக சிலாபத்தை சந்தியை அடைந்து புனித கடற்கரை நீரை தீர்த்தமாக இங்கே எடுத்துக்கொண்டு வருவார்கள்.

இந்த தீர்த்தம் காட்டா விநாயகர் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு மண்பானையில் இந்தத் தீர்த்தத்தை ஊற்றி அம்மன் மண்டபத்தில் வைத்து அந்த மண் பானையில் 4 அங்குல நெய் தடவிய திரி வைத்துக் கொளுத்துவார்கள். அங்கு மண் பானையில் வைக்கப்பட்ட அகல் விளக்கு திங்கள் மாலை முதல் அடுத்த சனி வரை சுடர்விட்டு எரிந்து கொண்டே இருக்கும். இவ்வாறு உப்பு நீரில் விளக்கெரித்து மடைபரப்பி காட்டாவிநாயகர் ஆலயத்தில் பூசைகள் நடைபெறும். அதையடுத்து ஞாயிற்றுக் கிழமை தீர்த்தக்குடம் வற்றாப்பளைக்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வாறு கடல் நீரில் விளக்கெரியும் காட்டா விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தியில் 10 நாள் திருவிழாவும் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் பரிபாலனசபை இந்த ஆலயத்தின் பெருமைகளை நிலைநாட்ட எல்லா விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூலை 30, 2016 அன்று வெளியிடப்பட்டது.